பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1–12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 2.
☞ தனி விகிதமும் உண்டு.


ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ளு சித்திரை-மீ 19உ (1—5—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 1.


## மி ன் சா ர ர ச ம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

# உண்மை விளக்கம்.

## முடிவுரை.

சிவசம்பு சுவாமி எழுதுகிறார்

உலகத்தியற்கையை உற்று நோக்கிடின் முற்றும் ஒரே வகையாய் நடை பெறும் என்று பகர முடியாது. வேற்றுமைக் கிடமாகவே விளங்கும் எனினும், அவ்வேற்றுமையை அப்படியே பார்த்துக் கொண்டே போனால் ஒவ்வொரு வேற்றுமையினின்றும் பற்பலவேற்றுமைகள், அவற்றினின்றும் எண்ணிறந்தனவாகப் பெருகி விடும். விடவே உலகியல் நடைமுறை ஒழுங்கு பெற்றியங்காது. ஆகலின் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணின் கலக்கத்துக்கும், கலகத்துக்கும் காரணமின்றி எதுவும் இயற்கை இன்ப எதுவாகவே இருக்கும். இருக்கவே எடுத்த முயற்சி இனிதாக நிறைவேறும். அப்போது அச்சத்துக்கோ, விருப்பத்துக்கோ, அணுத்துணையும் இடமின்றிப்போம். போகவே வேற்றுமை அனைத்தும் வெளித்தோற்ற மட்டிலே நின்றுவிடும், உள்ளே ஊறு ஒன்றும் வாராது. ஆனால் ஒற்றுமையில் வேற்றுமைப் புகுத்தினால் அல்லலே வந்தடையும். விரிந்து சொல்லுந்தோறும் விள்ளொணுக்கேடுண்டாகி உள்ளதையும் கொள்ளை கொண்டு எல்லாராலும் எள்ளி நகையாடற்கு இடந்தந்து கொண்டே யிருக்கும். அது வாழ்க்கை நலத்தை வரிசையாய் விழுங்கி விடும். மக்கள் மாக்கள் போல வாழத்தலைப்படுவார்கள். அது சிறப்புறு காரியமாகுமா? என்றுந் தம்மால் இயன்ற வளவிலே உதவியுடையராய் மக்கள் வாழ்வதே தக்கதென்பது சான்றோர் துணிபு. குற்றமின்றிய நன்மையைச் செய்வதே நல்லுதவியாகும். உதவும் குணமில்லான் எல்லாம் உடையனெனினும் நல்லானென்றே நாடற்பாலனல்லன். அவன் தனக்கெனவே வாழ்வான் பிறர்க்கோர் பயனும் அவனால் வந்தணுகாது. மனக்கவலையும் அவனை விட்டு நீங்காது. துன்பமே துணையாய்த் தொடர, விழைவும், வெறுப்பும் அவனை மென்று மென்று தின்ன வீறிலியாகவே திரிவான். காரணம் என்ன? அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கையே. "அன்பின் வழியது உயர்நிலை." நிலையறியாதபோதுமலைவுதான் அவனுக்கு வழித்துணை. உயிருந்தும் அவன் எந்தப் பயனுக்கு இலக்காவன்? உயிர்குணமாகிய அன்பு ஒன்றிருக்குமாயின் அவனே உயர் நிலையில் மலைவற இருந்து மாண்பயன் எய்துபவனவன். அன்றியும் அவனால் ஆருயிர்கட்கு ஒருயிரென மதிக்கத்தக்க உதவியும் கிடைக்கும். அவனது உடலின் கண்ணுள்ள ஒவ்வொருறுப்பும், உடைமைப்பொருள்கள் அனைத்தும், உயிருங்கூட வறுமை, சிறுமை, பிணி, எதிர்பாராத இயற்கை, ஊறுபாடு முதலியவற்றால் வருந்துபவர்க்குத் திருந்திய உதவியாய் வந்து பொருந்தும். அத்தகு பெரியோனை தித்திக்கும் தெள்ளமுது போல்வான்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரியர், அன்புடை
என்பும் உரியர் பிறர்க்கு [யார்

ததீசி முனிவர் என்பையும் உதவினர் என்பது பண்டைச்சரிதம். தற்காலத்துக் காந்தி யடிகள் மிகுதியும் தகுதியடையார். அம்மட்டோ! அவரைச் சார்ந்த சிலரும் குறிப்பிடத்தக்கவரே. எவ்வாற்றானும் ஒவ்வா நிலையை ஒழிக்க முயல்பவர் செவ்வே தெளிந்த திருவுள முடையார். கடவுளிடத்து மிக்க அன்புடையே மென்று கோலம் பூண்டாரெனினும் ஏழை மக்களிடத்துண்டாகும் இடுக்கண் களைய முற்படாதவர் பிற்பட்டவரே, உயர்வாகக் கணிக்கத்தகாதவரே.

வறுமையாலோ பிணியாலோ பிறகாரணங்களாலோ சிறுமைப்பட்டு மெலிந்து வாடித்திரியும் நடமாடுந் தெய்வங்களாகிய ஏழை மக்களன்றோ கண்கண்ட தெய்வம். அத்தெய்வ வழிபாடு செய்யாதவன் எத்துணைக்கல்வி கேள்வி முதலியவற்றால் மேம்பட்டு ஈசன் பூசனையில் நேசங்காட்டி வாசமலர் தூவி வணங்கினாலும், அரும்பெரும் நூல்களை ஆராய்ந்தாலும் உண்மை அன்பனாகான், மெய்யறிஞனாகான், தன்னலப் பற்றொழித்தவனாகான். பகவான் புத்தர் பரதுக்க துக்கியாய் நின்ற பழுதறு விழுப்பொருள் பயக்கும் தர்ம [அற]த்தைப் பரப்பினர். பார்ப்பனக் குறும்பைப் பறித்தெறியவே பாடுபட்டார். அவர் திருவவதாரம் செய்திலராயின் இன்னுங் கொடுமை எண்ணத் தொலையாததாயிருக்கும். பின்னிட்ட பெரியர் சிலர் துணிந்து முன்னின்றும் பரந்த கருணை நோக்கத்தோடன்று மதாபிமானம் பற்றியே. அதுவும் நிறைந்த அருளோக்கமன்று. தன்னலஞ் சிறிது சார்ந்தே யிருக்குந் தகைமைத்தேயாம். எல்லாச் சமயங்களுக்கும் அறமே முதற்படி. அவ்வறநெறியில் முதன்மை பெற்றுள்ளது அன்பு ஒன்றேயாம். அவ்வன்புதான் தொடர்புடையார் மாட்டுச் சென்று துன்பங்களைந்து, ஈத்துவக்கும் இன்பம் அறிவித்துதவி, நற்புகழ் நிறுவி, அருளை யீன்று, மெய்யுணர்வைத் தந்து, அவாவகற்றிப் போரா வியற்கைப் பெருநிலைமை மக்கட்குக்கொடுக்கும். அவ்வன்பூற்று இல்லையேல் உலகியலோ, அரசியலோ, மற்றெய்வியலோ அமைதியாய் நடவாது. அநுகூலமும் பெரும்பாலுங் காணக்கிடையாது. தன்னல முடையார் தற்போதம் உடையாரே. தற்போதம் "யான், எனது" என்னுஞ் செருக்கைப் பெருக்கிக் கொண்டே போம். "யான், எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்தவுலகம்புகும்". தன்னலமறுப்பைச்சார்ந்து சமத்துவ புத்தியோடு மன்னுயிர்க் கருணைவைக்கும் மாசிலாப் பெரியோர், என்றும் இன்னுயிர் போல்வாரன்றோ. இத்தகைய குணம் எந்தப் பார்ப்பான் (அரசியல் வாதி, நியாயவாதி, தெர்ப்பைக்கட்டை வாதி முதலியவர்) இடத்தாவது மருந்துக்கேனுங் கிடைக்குமா? கிடைத்தால் அவன் தற்போதம் இல்லாதவனே, சமரசபாவனையுடையவனே, அன்புடையவனே, அருளுடையவனே ஆவன். அவன் பேருபகாரியே, அதுதானே அந்தச் சாதியினிடத்துக் கிடையாது. வாய் பேசும், கைகாட்டும். ஆனால் செய்கையை நோக்கினால் தீ மூட்டல் தான். எது எவ்வாறாயினும் ஆகுக. நம்மவர் தங்களுக்குப் பிறப்புரிமையாகிய அன்பை அயராது வளர்த்துப் பலனடைந்து, பிறர்க்குதவிப் பெருவாழ்வு வாழ்வாராக. ஆரிய நெருப்பை அடியோடு அவித்தொழிக்கத் தக்கது சீரியச் செந்தமிழ் அன்ப நீரே அன்பு போலும் அரியமொழி மற்றெம் மொழியினுமில்லை. பக்தி முதலிய பதங்கள் 'யான், எனது' என்பவற்றோடு சிறிது தொடர் புடையனவே. அன்பே அன்பு அதற்கிணை அதுவே.

அனைத்துயிரும் உலகத்தில் தத்தம் கருவி கரணங்கள், உறுப்புக்களைக்கொண்டே உணர்வது இயற்கை. எனினும் பகுத்தறிவின் பாற்பட்ட மக்கட் பகுதியினர் தத்தம் இயல்பிற்கேற்பத் தாமாகவே காணவேண்டும், கேட்கவேண்டும், முகரவேண்டும், பேசவேண்டும் மற்றத்தொழில்களைச் செய்யவேண்டும் தமக்குத்தாமே உதவியாயிருப்பது ஒன்றே எக்காலத்தும் எதற்கும் எளிதான சாதகமாகும். பிறரைக்கொண்டடைபெறுவதென்பது பெரிதும் போற்றத்தக்கதன்று. ஏதேனுங் காரணம் பற்றிச் சிலவேளைகளில் பிறர் சார்பு வேண்டுவதும் அவசியமே. பன்னாட் பழக்கத்தால் எந்தத் தொழிலும் இயல்பு மாறி நடப்பதும் உண்டு. அது அறிவுடைமை ஆகாது. ஆதலால் எல்லாத் தொழில்களையும் எவ்வாறு பிறரால் நடத்திக்கொள்ள முடியுமென்பதை உற்று நோக்கவேண்டும். கற்றுத்தேறிய உணர்வு மிக்குடையார் காலப்போக்கிலே மாறுபாடு காணார். ஒருபடித்தாயிருக்கும் உண்மையைப் பேணி என்றும் நன்றே செய்வர். எனினும், அவரையும் வேறுபடச் செய்யும் தொடர்ந்த வினைகளும், சூழ்ந்த வினையாளர்களும் செல்லும் நெறியையும், செய்யும் முறையையும், சேருந்துறையையும் செவ்வனே காட்டக்கூடிய நல்லுணர்வின் மேம்பட்டோர் வேண்டுவதும் முக்கியமே. ஆனால், அவர் உணர்த்துந்தோறும் தாமும் உடன்பற்றி ஒருங்குணர்ந்து தேறுதலே சிறப்புறு முறை. அம்முறைதான் ஆதி முறை. அது சேர்க்கைப்பழக்கத்தாலும், பராக்கு வழக்கத்தாலும் சிதறுண்டு சித்தத்தின் தெளிவைச் சிறிது சிறிதாகக் கரைத்து, அறிவைக்குறைத்து பிறர்மேற் பாரத்தை ஏற்றிவிட்டது. அப்பாரம் சுமக்குமவர்க்கு ஆதாயமாக அமைந்து விட்டமையின் அவர் தம் வலி அதிகப்பட்டு நாளடைவிலே சூழ்ச்சிக்குத்துணைபோந்து இவரை வீழ்ச்சியில் கொணர்ந்து தாழ்ச்சி பெறச் செய்து விட்டது. "சமர்த்தனுக்குங் காணிவேண்டாம், அபத்தனுக்குங் காணிவேண்டாம்" "மறந்து செத்தால் உயிர் திரும்பிவருமா?" ஆதலின் மக்களுக்குரிய மாண்பை மதிக்காதவர் இருக்கென்? இறக்கென்? இரண்டும் ஒன்றுதானே. "பேய்க் கொமட்டிக்காய் குப்பைக்குழியிற் கிடந்தாலும் சரி, கோமகள்சமுகத்திற் கிடந்தாலும் சரி, விரும்பி எடுப்பார் ஒருவருமிரார்" காலாலே எற்றித் தள்ளுவர். "எலுமிச்சம் பழம் எங்கே கிடந்தாலும் என்ன? கையாலே ஏற்றுக்கொள்ளுவர்" "பெருமையுஞ் சிறுமையுந் தான் தரவருமே" கெடுக்க வல்லதும், கெட்ட எடுக்கவர் தங்களை வல்லதும் இம்மனம் என்றால் தாமே தமக்குத் துணையும், உறவும், குருவும் என்பதே தேற்றம். எத்துணை மாற்றம் பிறரெடுத்துரைப்பினும் சித்த நிலையிற் றிறம்பாத சுத்த வீரரும் உளரே யன்றோ! இறுமாந்திருப்பவர் ஏமாந்தேபோவர். "ஏற்றம், உங்களுக்கு முன்னேற்றம்" என்று நம்மவரைப் போற்றிப் புகழ்ந்து பொய் முடி சூட்டி; வோட்டுவாங்கிக்கொண்டு தம் பாட்டைப்பார்க்குந் தற்காலத்து லௌகிகப் பார்ப்பனரை விட, முற்காலத்துப் பார்ப்பனர் மோட்சத்தின் பெயரைச்சொல்லி முழு மோசஞ்செய்து விட்டனர்.

"கெட்டிக்காரன் பொய் எட்டு நாளையில் வெளியாகும்" என்னும் பழமொழிப்படி சில அசத்திய மூர்த்திகளின் அசட்டுப் பேச்சும், கபடப் பேச்சும், தற்காலத்தில் மூச்சு விட முடியாமல் திணரச்செய்தாலும் உண்மையை உணரவும், மாற்றார் கூற்றம் வலி தொலைந்தொழிய வழி தேடவும் உபாயம் எளிதிலே புலப்படுகின்றது. ஆனால், அக்காலத்து வைதிகப் பேச்சு வாய், கை, கால்களெல்லாவற்றையுங் கட்டிச் சுருட்டி வைத்ததோ எட்டாண்டு; எண்பதாண்டு எண்ணூற்றாண்டு அல்ல எண்ணாயிரம் ஆண்டு வரையினுங் கூட வலிபெற்று நின்று விட்டது. அவ்வலி தொலையும் வழி இப்பொழுது தான் கட்புலனாயிருக்கிறது. அவ்வழியில் ஒன்றியாய்ப் போக முடியாது. சிலர் சேர்ந்து செல்லவும் முடியாது. இருடியர் மரபில் வந்த திருடர் ஆங்காங்கு கூட்டங்கூட்டமாய் ஆட்டங் காட்டி அலைகின்றனர். ஆதலினால் பலபேர் கூடியே செல்ல வேண்டும். செல்லினும் அல்லலைக் கடந்து போகவும் வேண்டும். அல்லலோ அநேகம். அவற்றைப் பொருட்படுத்தாது போய்த்தான் ஆகவேண்டும். போகாவிடின் புன்மை நீங்காது. "துணையோடல்லது நெடுவழிபோகேல்" என்னும் முதுமொழி சிந்திக்கத்தக்கது. முக்காலேமூன்று வீசம் கிணறுதாண்டினும் மோசந்தானே. முழுக்கிணறு

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# கல்யாணம்.

## கைவல்லிய சாமியார் எழுதுகிறார்

கல்யாணமென்றால் எல்லோருக்கும் தெரியும்: அதற்கு வியாக்கியானம் வேண்டாம். மனிதனுக்கு அறிவு வந்து கூட்டமாகச் சேர்ந்து நியாயா நியாயங்களைப் பகுத்துத் தொழில்களை ஏற்படுத்தி அத்தொழில்களுக்குத் தகுந்தது போல் ஜாதி வகுத்து, அந்தணர்என்பாருக்கு எல்லா ஜாதிகளிலும், அரசர்கள் என்பாருக்கு அந்தணனை விட்டு மற்றெல்லா ஜாதிகளிலும் அந்தணனையும் ஆசனையும் விட்டு வணியர்கள் என்பாருக்கு மற்றஜாதிகளிலும், பணியாளர் என்பாருக்குமேற்கண்ட மூவரை விட்டு மற்றெல்லா ஜாதிகளிலும் விவாகம் செய்து கொள்ளலாமென்றும், அந்த விவாகம் எண்வகையென்றும், அந்த எண்வகையில் இன்னின்னவர்களுக்கு இன்னின்ன கலியாணம் கூடுமென்றும் விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ் விதிகள் வடதேசத்து ஆரியர்களின் ஏற்பாடாயிருந்தாலும், தென்தேசத்தாரும் அவர்களுடன் சேர்ந்து மதம், ஆசாரம், கொள்கை, வழக்கம் பழக்கங்கள் எல்லாம் அவ்வாரியர்களைப் பார்த்தே நடக்கும்படி ஏற்பட்டு விட்டபடியால் அதைப்பற்றிய விவகாரத்தைஇந்த வியாசத்தில் எடுத்துக்கொள்ளுவதில் 'பிரயோஜனமில்லை. கூட்டமாகச சேர்ந்து தொழில் செய்வதற்காக ஏற்படுத்தினபெயரை ஜாதியாக்கி அதையேசிறிதும் பெரிதுமாக ஸ்திரப்படுத்தி, அந்தஜாதியிலேயே கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்னும் கட்டாயத்தால்; அந்தந்தஜாதியில் செய்து வரும் கலியாணத்தைப் பற்றி மட்டும் இங்கு கவனிப்போம்.

பொதுவாக மாப்பிள்ளைக்குப் பெண் விசாரிப்பது வழக்கமே யொழிய, பெண்ணுக்கு மாப்பிள்ளை விசாரிப்பது வழக்கமுமில்லை. அது மதிப்புக் குறைவாகவும் கருதப்படுகிறது. பெண்ணுக்கும் மாப்பிள்ளை விசாரிப்பது மறைவாக மனதில் நிச்சயப்படுத்துவது வழக்கம். ஆனால் இப்பொழுது மாப்பிள்ளைக்குப் பெண் பார்ப்பதும், பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்ப்பதும் ஒரே வழக்கத்திலிருக்கிறது. இவை எப்படியிருந்தாலும் பெண்ணுக்கு ஆணும், ஆணுக்குப் பெண்ணும் வித்தியாசப்படாமல் பத்துக்கு ஐந்து பழுதில்லாமல் சமத்துவத்தில் ஒத்திருக்கவேண்டும். மனிதனுடைய புத்திக்கு எட்டுகிறவரையிலும் நன்மை தீமைகளைப் பகுத்துப்பார்த்தே கல்யாணம்செய்யவேண்டி இருக்கிறது, "பெண்டு வாய்ப்பாள் புண்ணியவானுக்கு" 'பெண்ணின் புத்தியிலே புருஷன்குணம்" "ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியவதி" என்னும் பழமொழியும் வீணல்ல; கல்யாணம் நிச்சயம் செய்வதற்கு முன் பொருத்தம் சரியாக விருக்கிறதாவென்று ஜாதகம் பார்க்கப் படுகிறது. சோதிடம் ஒருகணக்கு என்பது உங்களுக்குத் தெரியும். ஆனதாற்றான் பத்து வயது பெண்ணுக்கும் ஐம்பது வயது ஆணுக்கும் ஜாதகம் சேருகிறது. இப்படிச் சேர்ந்த ஜாதகத்திற்குப் பொருத்தம் பணம். ஆண், பெண் என்பது தவிர கல்யாணம் செய்யவேண்டி பொருத்தங்கள் எதாவது உண்டா? இல்லை. எப்படி பின்கல்யாண பொருத்தத்தை ஜாதகம் நிச்சயம் பண்ணமுடியும்? ஜாதி, குடும்பம், யோக்கியதை, அழகு, வயது முதலியவைகளை முதலில் நாமே தீர்மானம் பண்ணிப் பின் சோதிடம் கேட்கிறோம். சோதிடக்கணக்குப் பிரகாரம் ஜாதகம் சேரவில்லை யென்று சோதிடன் சொல்லிவிட்டால் நமக்குள்ள கஷ்டநஷ்டங்கள் எவ்வளவு! ஜாதி யென் [illegible] குறைந்து, குடும்பத்தில் சிறிது தாழ்ந்து யோக்கியதை போதுமானதில்லாமல் வயது சிறிது மிகுந்திருக்கும் ஜாதகங்கள் சோதிடர் கணக்குப்பிரகாரம் சேர்ந்தாலும், அந்தக் கல்யாணம் செய்ய நம்ம சோதிட நம்பிக்கையும், துணியும் பிரயோஜனப்படுகிறதா? அதுவும் இல்லை. பின் எதற்காகச் சோதிடம் பார்க்கவேண்டும்? ஆயுள், அதிர்ஷ்டம் முதலானவைகளின் நிச்சயம் உங்கள் புத்தியில் நிர்ணயிக்க முடியாததினால் அல்லவா சோதிடம் பார்க்கிறீர்கள். சோதிடனுக்கு ஆயுள், அதிர்ஷ்டம் முதலியவைகளை நிச்சயப்படுத்தும் சக்தி இருந்திருந்தால் நம்தேசத்தில் ஜாதகம் பார்த்தே கல்யாணம் செய்யும் பிராமண ஜாதியில் பால்ய விதவைகள் அதிகமிருப்பதற்குக் காரணம் என்ன? கல்யாண சமயத்திலிருந்த செல்வம், பாக்கியம், சுகம் இவைகள் ஒழிந்த சதி புருடர்கள் அனேக மில்லையா? இவை கல்யாணசமயத்தில் சோதிடனால் சொல்லப்பட்டிருக்காது. சொல்லப்பட்டிருந்தால் இந்த விவாஹம் நடந்திருக்காதே! அதிலும் உங்கள் குடும்பம், தேசம் முதலியவழக்கம்தெரியாததும், மலையாளத்துறைப்பு மார்க்கத்தவர்களின் கூட்டத்தில்சோதிடம் சொல்லிப் பழகின மலையாளத்து சோதிடனால் பொருத்தம் பார்ப்பது நன்மையா? தீமையா? மனப்பொருத்த மிருந்தால் மற்றெல்லாப் பொருத்தமும் பார்க்கவேண்டியதில்லை யென்பது சோதிடசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டு வழக்கமான வார்த்தையும் அப்படியே இதை அநுசரித்தே உரிமைப் பெண்ணுக்கு ஜாதகம் பார்க்கவேண்டியதில்லை என்கிறார்கள். மாமன் மகள் உரிமை, அத்தை மகள் இரண்டாம் பட்சம். குடும்பத்தில் மாமி மருமகள் ஏகோக ஒற்றுமையிருந்தால் குடும்பத்திற்கு அநுகூலம். மாமியார் மருமகளைக் குற்றம் சொல்லுகையில் ஜாதி, குணம், யோக்கியதை, வளர்ப்பு முதலியவைகளை வற்புறுத்தித் திட்டுவது வழக்கம். உரிமைப் பெண்ணில் மாமியாருடைய ஜாதி, குணம், வளர்ப்பும் மருமகளுடைய ஜாதியும், வளர்ப்பும் ஒன்றேயானதால் ரோஷம் பாராட்ட மனதிற்கு ஹேதுவில்லை. மகன் பெண்சாதியைத் திட்டுவதிலும் தாயாரைச் சலித்துக்கொள்வதிலும், மாமியும் மருமகளும் ஒன்றாய்ச்சேர்ந்து, தாயார் மகனிடம் மருமகளுக்காகவும், பெண்சாதி புருடனிடம் மாமிக்காகவும் பரிந்து பேசுகிறார்கள். ஆனதால் மனைவியின் பேச்சைக் கேட்கிறான் மகன் என்று தாயார் சொல்லுவதற்கும்; புருஷன் தாயார் வார்த்தையைக் கேட்கிறார் என்று பெண்சாதி சொல்லுவதற்கும் அதிகம் ஹேதுவில்லை புருஷனைக் குற்றஞ்சொல்லப் பெண்சாதி பிள்ளையை ஹேதுவாக்கி புருஷன் ஜாதி குணத்தை இழிவாகச் சொல்லுகையில் கேட்ட புருஷன் தன் ஜாதிதான் மகன் என்றும் தன் குணமே பதிந்திருப்பதாகவும் எப்படி மகிழ்ச்சி அடைகிறானோ, அது போல உரிமைப் பெண்ணை உடைய மாமியும் மருமகளும் அனேக சமயங்களில் ஐக்கியப்பட்டு விடுகிறார்கள். பின்னும் பெண்கள் தாயார் வீட்டையே போஷிப்பதிலும் தாய் வீட்டு ஜனங்களிடமே பற்றுடையவராக விருக்கிறார்கள். உரிமைப் பெண்ணில் மாமியாளும் மருமகளும் ஒரே தாய் வீடானதால் குடும்பத்தில் அதைப்பொருத்த விவகாரமும் அனேகமாய் குறைந்து விடுகிறது. புருஷன் வீடு எவ்வளவு பணக்காரராயிருந்தாலும் தகப்பன் வீடுச் சீதனத்தில் பெண்களுக்குப்பிரியம் போவதில்லை. தகப்பன் கொடுத்தது போக தம்பி தமயன் கொடுக்காததில் மனவருத்தமடைந்திருக்கும் தங்கை தமக்கைகளுக்கு அவர்கள் பெண்கள் தன் வீட்டிற்குக் கொண்டு வரும் சீதனத்தால் மனம் ஒருவாறு திருப்தியடைய யேதுவாய் யிருக்கிறது. பெண்ணின் வீட்டில் பெண்ணின் தாயாரும் அவளுக்கு மாமியான பாட்டியாருமன்றோ எஜமானிகள். இவர்கள் இரண்டு பேர்களுக்கும் பெண்ணின் புருஷன் வீடன்றோ மகள் வீடு. தன் சொத்தை மகன் பிள்ளை அனுபவிப்பதைவிட மகள் பிள்ளை பேத்தியனுபவிப்பதில் யாருக்கும் திருப்திக்குறைவு இல்லை. இதை எல்லாம் உத்தேசித்தே கொங்கு நாட்டில் பெண்ணைவிட மாப்பிள்ளையின் வயது குறைந்திருந்தாலும் உரிமை என்னும் பாத்தியதையை விடுவதில்லை.

இங்கு நாம் வற்புறுத்த வந்த விஷயம் சோதிடக்கணக்குபிரயோஜனப்படுவதில்லை யென்றும், எல்லாப் பொருத்தங்களிருந்தும் சோதிடத்தால் பாதிக்கப்பட்டு சரியான கல்யாணங்கள் எத்தனையோ தடைபட்டு விட்டது.

தமிழக்குடும்பக்கல்யாணங்களில் பிராமணப் புரோகிதனைக்கொண்டு கல்யாணம் நடத்தும் வழக்கம் பரவிவிட்டது அவர்கள் அவசியமும் இல்லை பலனுமில்லை. அவர்கள் சொல்லும்மந்திரமும் நமக்கு அர்த்தமாவதுமில்லை. பந்தலில் தாலி கட்டும் சடங்குக்கு வேண்டிய சாமக்கிரியைகள் சரியாய் அமைக்கவும் வழக்கமான சடங்குகளைச் செய்யவும் பந்தலிலிருக்கும் அனுபோகப்பட்ட நம்மனிலொருவரைப்புரோகிதர்களுக்கு உபாத்தியாயராயிருக்க வேண்டும். கங்கணங்கட்டுவதற்குப் பூஜை முன்னா? பின்னா? என்பதையும் நம்மவர்களே புரோகிதருக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. கொங்கு நாட்டில் பரம்பரப்பூர்வீக வழக்கமாய்த் தொண்டு தொட்டு வந்திருக்கும் அருமைக்காரனென்னும் சுய ஜாதி [இவர்கள் அனேகமாக பந்துக்களாகவே இருப்பார்கள். புரோகிதரால் நடந்து வந்த கல்யாணங்கள் கூட இப்பொழுது பார்ப்பனப்புரோகிதரால் நடத்தப்படுகிறது. பணக்காரர் செய்வதே புத்திசாலித்தனமென்றும் நாகரீகமென்றும் நினைக்கப்படுமிவ்வுலகத்தில் பணக்காரர் நியாயாநியாயத்தையும் அவசியத்தையும் கவனிக்கவேண்டும். அவர்கள் பணம் அவர்களுக்கு நிலை இல்லாவிட்டாலும் அவர்களாலேற்படும் அவசியமிலாததும், பலனற்றதும் நஷ்டத்தை யுண்டு பண்ணக்கூடியதும் முட்டாள் தனமானதுமான விஷயங்கள் சமூகத்தில் நிலைத்து கூட்டத்துக்கு அடிமைத்தனத்தையும் மூடநம்பிக்கையையுமுண்டுபண்ணுகிறது. என்பதைப் பணக்காரர்கள் கவனிக்கவேண்டும் முன் மாப்பிள்ளைக்குச் சந்தனப்பூச்சும் அங்க வஸ்திரமும் ஆபரணமும் அலங்காரமாயிருந்தன, பின் ஷர்ட்டு போட்டார்கள். அதற்குப் பின் கோட்டும் வந்தது. இப்பொழுது கால் சொராய், காலர், டை, பூட்சு, யெல்லாமாட்டி மனையிலுட்காரவைக்கிறார்கள். அவை விகாரமாயிருப்பதுடன் நமக்கும் அதற்கும் ஒத்துவருவதுமில்லை. பார்ப்பனப் புரோகிதர்கள் புகுந்துபூரி தக்ஷிணை வாங்கின குடும்பமும் இங்கிலீஷ் நாகரீகம் தாறுமாறாகக் குடிகொண்டகுடும்பங்களும், கடனென்னும் கடலைக்கடப்பதில்லை. பார்ப்பனரல்லாதாரின் கல்யாணங்களில் என் பார்ப்பனர்களுக்குத் தட்சிணை கொடுக்க வேண்டும்? யக்கியங்களும் யாகங்களும் செய்து வைத்த பிராமணர்களுக்குக் கொடுக்கும் கூலிப்பொருளே தட்சிணை என்று சொல்லப்படுவது. யக்கியம் யாகம் செய்து வைத்த பிராமணன் அதனால் தனக்கு ஏற்பட்ட பாவம் போவதற்கும், செய்து வைத்தவன் பரிசுத்தனாவதற்கும் பிராயச்சித்தம் செய்து கொள்ளவே தட்சிணை வாங்கவேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. அப்படிக்கில்லாமல் கலியாணத்துக்குவரும் பிரபுகளுக்கு யேவல் செய்யும் பார்ப்பானும், சதுர் சங்கீதக்கதை பார்க்க வந்தவன், அதைக்கேட்க வந்தவன், அக்கம்பக்கமெல்லாம் இதே தொழிலாகத்திரிகிறவன், ராஜாங்கத்தில் சேவை செய்கிறவன், சமையல்காரன், உங்கள் குடிக்கு ஆபத்தையுண்டுபண்ண கோட்சொல்லி அதைப்பெருகி விரித்து வயிறுவளர்ப்பவன், குடியன், வஞ்சனையுடையோன், இப்பேர்ப்பட்ட

வர்களெல்லாம் இப்போது பிராமணன் என்கிற பெயரால் தட்சிணைக்கு உரியவர்களாகிவிடுகிறார்கள். இவர்களுக்கே தட்சிணை கொடுக்கப்படுகிறது. மேற்சொன்ன இவர்களோ சாஸ்திரப்படியே பிராமணத் தன்மையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் இவர்களுக்குக் கொடுப்பவர்கள் பாவியாகிறானென்பது ஸ்மிருதியின் விதி. வாழைகட்டின வாசற் படியைக்கண்டால் பார்ப்பான் நுழைந்து கொள்வான், பிச்சை யெடுப்பதில் அவனுக்கு அதிகாரமதிகம் பிச்சை யெடுக்கவே நாங்கள் பிறந்த ஜாதியென்று பணக்காரனுஞ் சொல்லுகிறான். அந்தவார்த்தையைக் கேட்டு அவனுக்கு வேண்டியதைக் கொடுக்கப்பிறந்த ஜாதி என்றே(முட்டாள்த்தனமாய்) நம்மை நினைத்துக்கொண்டுநாமும் கொடுக்கத் தயாராகவிருக்கிறோம். பெரியகலியாணங்களில்தட்சணை கொடுப்பதைப்பகுத்துச்சொல்லபணக்காரப்பார்ப்பானே வந்துசேர்ந்து கொள்கிறான். மாப்பிள்ளை வீட்டாரையும்பெண்வீட்டாரையும் தட்சணை கொடுக்கும் விஷயத்தில் தனித்தனியாக அவர்களிடம் பேசி ஒருவருக்கொருவர் போட்டி போடச்செய்து எவ்வளவு அதிகப்படுத்தமுடியுமோ அவ்வளவும் செய்து விடுவார்கள். நம்மவர்களும் தெட்சணை குறைத்துக்கொடுப்பது தங்கள் பெருமைக்குக் குறைவென்றும் நினைக்கிறார்கள், ஏழை கல்யாணத்தில் கூட கல்யாண வீட்டைக்கண்டால் பார்ப்பான் உட்புகுந்து கெஞ்சிக் கூத்தாடி ஏதாவது வாங்காமற் போவதில்லை. கல்யாணக்குப்பையை வாரும் குப்பவாரிக்கும் கல்யாணத்திற்கு வந்தவர்களுக்கு ஏவலாளியாயிருந்து எடுபுடி வேலை செய்து இரவும் பகலும் தூக்கமில்லாமல் சரியாய்ச் சாப்பாடில்லாமல் அலைந்து திரியும் கையாள்களுக்கும் உண்மையாகவே நம்மிடம் அன்பாயிருக்கும் ஏழைகளுக்கும் 4 அணு அதிகம் கொடுத்தால் அவன் செவ்வையாகக்குப்பைவாருவதோடு இன்னமும் பக்தியாய்உழைப்பதோடும் அனேக நாள் விசுவாசத்தோடும் இருப்பான். இதனால் புண்ணியமும் உபகாரமும் உண்டு. இப்படிக்கில்லாமல் கல்யாணத்தில் பெருமைக்காகவும் போட்டிக்காவும் முகஸ்துதிக்காவும் செய்யும் அக்கிரமச்செலவுகளும் அதிக நாள்கல்யாணத்தை நடத்தி அதனால் ஏற்படும் டம்பச் செலவும் தங்களைக் கடனாளியாக்கிக் கவலை யுறச்செய்வதோடு தங்கள் பின் சந்ததிகட்கும் பெரும் துன்பத்தையும் கொடுக்கின்றன.

## ‘‘ஹஜ்ஜு’’ யாத்ரீகர்கள்.

ஈரோட்டிலிருந்தும் பெரியக்கிராமத்திலிருந்தும் அலி ஜனுப்களான மை. ஷேக்மதார் சாயபு, இ. கு. முகம்மது மீரு சாயபு, சா. கா. முகம்மது இப்ருஹிம் சாயபு, சி. ச. அலாவுதீன் பாஷா சாயபு ஆகிய இந்நால்வர்களும், ஆறு பெண்சீமாட்டிகளும் 21-4-27-வயன்று மக்காமாநகருக்குப்பிரயாண மானார்கள். ஷை நால்வர்களும் ஈரோடு, பெரியக்கிராம் ஜமாத்தார்களடங்கிய ஈரோடு மஜீத்திலிருந்து இஷாத்தொழுகைக்குப் பின் தக்சபீருடன் ரயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சுமார் 1000 ஜனங்கள் பிளாட்பாரத்தில் ஆஜராயிருந்தனர். யாத்ரீகர்களுக்கு முஸலீம் களாலும், இந்துக்களாலும் ஏராளமான மாலைகள் சூட்டப்பட்டன. அது சமயம் பிளாட்பாரத்தில் சுன்னத் ஜமாத்தார்களாலும் தப்லீகுல்இஸ்லாம் சங்கத்தாராலும் பிரிவுபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. ஹஜ்ஜு யாத்ரீகர்களின் சார்பாகவும், தன் சார்பாகவும், அலி ஜனுப் இ. கு. முகம்மது மீருசாயபு அவர்கள் உபசாரப்பத்திரங்களுக்குப் பதிலளித்துப் பின் ஜமாத்தார் களுக்கும் ஹிந்து சகோதரர்களுக்கும் சந்திப்பும் வந்தனமும் செய்து விடைபெற்றுக்கொண்டனர்.

---

# கோயமுத்தூர் நாயுடு மகாநாட்டில் சர் கே. வி. ரெட்டி நாயுடு காரின் தலைமைப் பேருரை.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

ஒரு இயந்திரம் பார்ப்பனரல்லாதாரை அழிப்பதற்காகவும், ஒழிப்பதற்காகவும் சுழன்று கொண்டேயிருக்கிறது. மற்றொரு இயந்திரம் பார்ப்பன ஆதிக்கத்தையும் பார்ப்பனப் பழஞ் செல்வாக்கையும் நிலைநிறுத்துவதாயிருக்கிறது! திரு சத்தியமூர்த்தி பழயமாதிரியானசெனெட்டை ஏற்படுத்தப்பிரியப்படுகிறார். எந்தப் பழய செனெட்டின் மூலம். சர். வெங்கட்டரத்தினமவர்களும். சி. ஆர். ரெட்டி அவர்களும்சிண்டிகேட் சபைக்குள் நுழைய முடியாமற் போயிற்றோ, எந்த பழய செனெட்டின் மூலம் தன்னால் எழுதச்சக்தியில்லாது பிறரால் எழுதப்பட்ட விஷயங்கள் கொண்ட மாத சஞ்சிகையை வெளியிடுபவர் ஒவ்வொரு முறையும் சிண்டிகேட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொண்டுவந்தாரோ, அந்தப்பழய செனெட்டை ஏற்படுத்த மிஸ்டர் சத்தியமூர்த்தி அய்யர் பகிரதப் பிரயத்தனம் செய்வதாகத் தெரிகிறது! ஆனால் பார்ப்பனரல்லாதாரை செனெட்டிலிருந்து நீக்குவது தன் மசோதாவின் கருத்தல்லவென்று சொல்லுகிறார்! இச்சந்தர்ப்பத்தில் நீக்ரோக்களுக்கு ஓட்டுரிமையில்லாது செய்வதற்கு அமெரிக்கா குடியரசுநாடுகள் அனுசரித்த சூழ்ச்சிகளெல்லாம் என் ஞாபகத்திற்கு வருகின்றன. யுனைடெட்ஸ்டேட்சின் 14வது திருத்தத்தின்படி எந்தெந்த நாடுகள் நீக்ரோக்களுக்கு ஓட்டுரிமைகொடுக்கவில்லையோ அத்தகைய நாடுகளுக்கு காங்கிரசில் குறைந்த பிரதிநிதித்துவம் தான் கிடைக்குமென்று சொல்லுகிறது. காங்கிரசில் தங்களுக்குக் குறைந்த பிரதிநிதித்துவமிருந்தாலும் பரவாயில்லை. நீக்ரோக்களுக்கு ஓட்டுரிமை யென்னவோ கொடுக்கக் கூடாது என்று அந்த நாடுகள் தீர்மானித்தன! அதன் பின் வந்த 15வது திருத்தப் பிரகாரம், நீக்ரோக்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுக்க வேண்டுமென்றும், அப்படிக் கொடுக்காது போனால் அது சட்ட விரோத மாகப் பாவிக்கப்படுமென்றும் கண்டிருந்தது. இந்தத் திருத்தத்திற்குங்கூட தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா நாடுகள் சதியாலோசனை செய்தன. ஒகல் ஹோமா என்ற நாட்டில் ஒரு மனிதன் ஓட்டுரிமை யடையவேண்டுமானால் அந்நாட்டின் அரசியலைப்பற்றி நன்றாய்த் தெரிந்தவனாகவும் அவ்வரசியலின் கட்டுத்திட்டக் கோட்பாடுகளை வாசித்து அதை மற்றையோர்க்கு எடுத்துச்சொல்லும் ஆற்றலுடையோனாயிருக்க வேண்டுமென்று இருக்கும் ஒரு நிபந்தனையைக் குறுக்கேகொண்டு வந்தனர். ஆனால் இத்தகைய கல்வி நிபந்தனையைப்பற்றி நாம் யதொரு ஆட்சேபணையும் சொல்லுதற்கில்லை. கல்வி அபிவிருத்தியடைதற்கு இத்தகைய நிபந்தனையும் ஒரு தூண்டுகோல் போன்றிருக்கும். ஆனால் அந்த நிபந்தனையை நிறைவேற்றினரா இல்லையா என்பதற்கு தங்களையே பரீக்ஷகராக வைத்துக் கொண்டார்கள். இந்தசூழ்ச்சியின் பயனாய் 1867ம் வருடம்வரையிலும், ஓட்டுச்சுதந்திரத்தை அனுபவித்திருக்க வேண்டியவர்களையும் மேற்படி சூழ்ச்சியானது தடை செய்தேவிட்டது! இதன் பயனாய் நீக்ரோக்களெல்லாம் ஓட்டுரிமையை அனுபவிக்காமலிருந்திருக்க வெள்ளையர்களெல்லாம் ஓட்டுரிமையையனுபவித்தே தான் வந்தனர்! நிபந்தனை பேருக்கென்னமோ பொது நிபந்தனை தான்! அமெரிக்கரின் மூளை இவ்வளவு செய்திருக்குமானால் அம்மூளையை விட சூழ்ச்சிகளில் மிக்க அனுபவமும் சாமர்த்தியமும் வாய்ந்த நம் நாட்டுப் பார்ப்பன மூளை எவ்வளவு வேலைசெய்யாது! ஒகல் ஹோமாவிலுள்ள நீக்ரோக்கள் ஓட்டுரிமையினின்றும் நீக்கப் பட்டிருக்கும்போது சென்னை யுனிவர்சிடியிலிருந்து பார்ப்பனரல்லாதார் ஏன் நீக்கப்படக் கூடாது! பட்டதாரிகள் அநேகர் செனெட்டில் நிறையவேண்டுமென்று திரு சத்தியமூர்த்திசொன்னார். லோகல்போர்டுகளால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட 43பேரில் 32 பேர் பட்டதாரிகள்என்று திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் எடுத்துக் காட்டவே திரு. சத்தியமூர்த்தி அய்யரின் கோரிக்கைஅடி பட்டுப்போயிற்று. ஆனால் அந்த 32 பேரும் பார்ப்பனரல்லாதார் என்பதை திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் மறந்து விட்டார்! மற்றும் பார்ப்பனரல்லாத பட்டதாரிகளும் பட்டதாரிகளாகக் கருதப்படலாமோ என்றசந்தேகமும் இருக்கிறது. பட்டதாரிகளால் தேர்ந்தெடுத்தனுப்பப்பட்ட பட்டதாரிகள் தான் கல்விவிஷயத்தில் பேசுவதற்குயோக்கியதையும் அருகதையு முள்ளவர்கள் என்பதன்றோ திரு சத்தியமூர்த்திஅய்யரவர்களின் கருத்து! எனெனில் ரிஜிஸ்டரான 10000 பட்டதாரிகளில், 8000 பட்டதாரிகள் திரு சத்தியமூர்த்தியின் ஜாதியைச் சேர்ந்தவர்களன்றோ? செனட்டுக்குத் தேர்ந்தெடுப்பில் விகிதாசார தேர்ந்தெடுப்புக்கூடாது என்று பெரிய ராஜீயநிபுணரான மிஸ்டர் சத்தியமூர்த்தி கூறுகிறார்! அதிதீவிரவாதமும் பரந்தஎண்ணமும் விரிந்தகொள்கைகளுடைய சத்தியமூர்த்தியன்றோ! ஜனநாயக ஸ்விட்ஜர்லண்டும் அமெரிக்காவும் அத்தகையதேர்ந்தெடுப்பைக்கையாண்டிருப்பினென்? ஆஸ்ட்ரேலியாவுங் கூட அத்தகைய முறையைக் கையாண்டிருப்பினுமென்? அத்தகைய நாடுகளைவிட இந்திய சுயராஜ்யக் கட்சியானது ஜன நாயகத்திலும், ராஜீய நிபுணத்துவத்திலும், அரசியலிலும், மிகவும் மேலானதன்றோ? விகிதாசார பிரதிநிதித்துவம் போய் செனெட்சபையில் எல்லோரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்களாய் உட்கார்ந்திருக்க வேண்டும். அப்பொழுதன்றோ திருமூர்த்தியின் கண்கள் குளிரும்; அப்பொழுது தானே இந்தியாவின் கல்வி விருத்தியடையும்! அப்பொழுது தானே இந்திய நாடும் சுயராஜ்யம் அடையப் போகிறது! இதிலிருந்து, இந்த ஒரு மசோதாவிலிருந்தே, பார்ப்பனரல்லா இயக்கமும், நாயுடுமார்கள் மகாநாடும் மிக்க அவசியம் என்று தோன்றவில்லையா? சர்க்கார் பொக்கிஷத்திற்கு வரி மூலியமாய் ஒரு பைசாகூட கொடுக்காதவர்களும், கல்வியிலாகா நடை பெறுதற்கும் ஒரு காசாவது கொடுத்துதவாதவர்களும், ஆகிய இவர்களே ஓட்டர்களாயுமிருக்க வேண்டும், ஆதிக்கமும் அதிகாரமும் செலுத்தல் வேண்டும்! இனிவரப்போகும் சுயராஜ்யத்திற்கு இதையே உதாரணமாகவும் எடுத்துக்கொள்ளுமாறு நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

## கோஷாமுறை.

இம்மகாநாட்டுக்குப் பெண்மக்கள் வராததைப் பற்றி நான் மிக விசனிக்கிறேன். இச்சந்தர்ப்பங்களில் நான் கோஷா முறையைக் கண்டிக்காமலிருக்க முடியாது. இத்தகைய சமுதாய மகாநாடுகளில் பெண்கள் விஜயம் செய்து காரியங்களில் கலந்து உழைக்க வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். நம்முடைய வகுப்பிலுள்ள பல்வேறு உப பிரிவுகளுக்குள்ளும் கலப்பு மணம் செய்துகொள்ள வேண்டுமென்பதை அமுலில் கொண்டுவந்து விட வேண்டும்.

நம் வகுப்பாரில் பலர் யோக்கியமானதும் பெருந் தன்மையானதுமான உபாத்திமைத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டுமென்று நான் பெரிதும் அபிப்பிராயப்படுகிறேன்.

குறிப்பு:—

முடிவுரைப் பிரசங்கம் அடுத்த இதழில் வெளிவரும்

# போளூர் ஆரம்பாசிரியர் மகாநாடு.

## ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் அக்கிராசனப் பிரசங்கம்.

24—4—27 காலை ஈரோட்டிலிருந்து ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் சென்னையிலிருந்து ஸ்ரீமான்கள் ஆரியா, தண்டபாணி பிள்ளை, முதலியவர்களும், காலை வண்டியில் போளூர் ஸ்டேஷனுக்கு வரும்பொழுது ரயில் மேடையில் ஆயிரக் கணக்கான ஜனங்கள், உபாத்தியாயர்களுள்பட, பாண்டு மேள வாத்தியங்களுடன் ஒரே கூச்சலாய் ஜேய்! சப்தத்துடன் வரவேற்று யூனியன் சேர்மேன் ஸ்ரீமான் பார்த்தலமேயூ அவர்களாலும், தாலூகா போர்டு பிரசிடெண்ட் ஸ்ரீமான் குப்புசாமி முதலியாரவர்களாலும், திராவிட சங்க நிர்வாகிகளாலும், ஆரம்பாசிரியர் மகா நாட்டு உபசாரணைத்தலைவராலும, யூனியன் தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர்கள் முதலியவர்களாலும் மாலையிடப்பட்டு ஊர் கோலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழி நெடுக மாலையிட்டு மரியாதை செய்யப்பட்டு, ஆதி திராவிடர்கள் தனியாய் ஒரு கூட்டமாக வந்து உபசாரஞ் சொல்லி மாலையிட்டு, பின் திராவிடசங்கக்கட்டடத்தில் வரவேற்று உபசாரப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்ட பின் தாலூகா போர்டு ஆபீஸிக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு உபசாரம் கூறி சிற்றுண்டி அளித்து, அங்கிருந்து மறுபடியும் ஊர்வலமாக வாத்தியங்களோடு ஆரம்பாசிரியர்மகாநாட்டின் பந்தலுக்கு அழைத்துச் சொல்லப்பட்டனர். சரியாய் 9 மணிக்கு போர்டு ஹைஸ்கூல் கட்டடத்திற்குள் ஏற்பாடு செய்திருந்த மகாநாடு ஆரம்பமாயிற்று. சுமார் 150 ஆரம்பாசிரியர்களும், 7, 8 பெண் ஆசிரியர்களும் மற்றும் 400,500 ஊர்ப் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். உபசாரணை அக்கிராசனரின் வரவேற்பு முடிந்ததும் ஸ்ரீமான் நாயக்கரை அக்கிராசனராகப் பிரேரேபித்து, ஆரம்பாசிரியர்களால் ஒரு உபசாரப்பத்திரமும் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான் நாயக்கர் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து செய்த அக்கிராசனப் பிரசங்கம்.

### அக்கிராசனப் பிரசங்கம்.

சாராம்சமாவது:—

சகோதரிகளே! சகோதரர்களே!

இன்று நீங்கள் எனக்குச் செய்த வரவேற்பு, ஆடம்பரம், உபசாரம், வரவேற்புப்பத்திரம் முதலியவைகளைக் கண்டுஎனது மனம் மிகவும் வெட்கப்படுகிறது. இவ்வித ஆடம்பரங்களுக்கு நான் எந்த விதத்தில் தகுந்தவனென்பது எனக்கே தெரியவில்லை. கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் என்று சொல்லப்பட்ட பெருத்த கல்விமான்களாகிய உங்களது மகா நாட்டுக்கு அக்கல்வியை ஒரு சிறிதும் பயிலாத நான் எவ்விதத்தில் தகுதியுடையவனுவேன். உங்களின் அன்பானவேண்டுகோளை மறுக்கப் போதிய தைரியமில்லாத காரணத்தாலேயே ஒருவாறு இப்பதவியை ஏற்க வேண்டியவனாயிருக்கிறேன் என்னுடைய வாழ்நாளில் சுமார் 2 வருஷகாலந்தான் நான் பள்ளியில் படித்திருப்பேன். அவ்விரண்டு வருஷமாகிய எனது 8 வயதுக்கு மேல்பட்டு 11 வயதுக்குள்பட்ட காலத்தில் நான் பாடம் படித்த காலத்தை விட உபாத்தியாயரிடம் அடிபட்ட காலந்தான் அதிகமாயிருக்கும். இதை யறிந்த என் பெற்றோர்கள். இவன் படிப்புக்கு லாயக்கில்லை என்பதாகக்கருதித்தாங்கள் செய்து வந்த தொழிலாகிய வர்த்தகத்தில் என்னுடைய 11-வது வயதிலேயே ஈடு படுத்தி விட்டார்கள். இந்த 2 வருஷக் கடுவிலேயும்என்கையெழுத்துப் போடத்தான் கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். ஆகவே கல்வி முறையிலும் உங்கள் குறைகளைப் பற்றியும் நான் உங்களுக்கு எந்த விஷயத்தையும் சொல்லக்கூடிய சக்தி என்னிடத்தில் இல்லை. ஏதோ என் புத்தி அனுபவத்திற்கெட்டிய வரையில் சில வார்த்தைகளைச் சொல்லுகிறேன்.

தற்கால ஆசிரியர்கள் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியத் தொழிலை ஒரு புனிதமான கடமை யென்பதாகக் கருதி பெருமை பட்டுக்கொண்டிருந்தாலும் அத் தொழிலுக்குறிய கடமைகளை சரியானபடி உணர்ந்து நடப்பதற்கில்லாத நிலையில் இருந்து கொண்டு அத்தொழிலை தங்கள் வயிற்றுப் பாட்டிற்கு நடத்தி வருவதே வழக்கமாயிருக்கிறது. ஆசிரியர்கள் இம்மாதிரி மகாநாடுகள் கூடி பேசுவதும், தீர்மானிப்பதும் தங்களுக்கு சில சவுகரியத்தை உண்டாக்கிக் கொள்ளவும் தங்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக்கொள்ளவுமேயல்லாமல் தங்களால் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளவோ, தேசம் முன்னேற்றத்திற்கு அநுகூலமான கல்வியை போதிக்கும் சக்தியை யடையவோ ஒரு பிரயத்தனமும் செய்ததாக நான் அறியவேயில்லை. முதலாவது நீங்கள் படித்த கல்வியும் நீங்கள் கற்றுக்கொடுக்கப் போகும் கல்வியும் வயிற்றுப்பிழைப்புக்கு ஒரு ஆதாரமாகக் கருதிக்கற்கவும்கற்பிக்கப்படவும் ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் மக்கள் அறிவுதத்துவத்திற்கோ தேசத்திற்கோ, ஒழுக்கத்திற்கோ ஒரு பலனையும் அளிக்க முடியாததாயிருக்கிறதென்பது நீங்கள் அறிந்த விஷயமே தான். ஆரம்பக்கல்விமுதல் உயர்தரக்கல்வி, சகலகலாகல்விஎன்பது வரையிலும்கவனித்தால்தற்காலம் அடிமைத்தன்மையையும்சுயமரியாதையற்ற தன்மையையும்உண்டாக்கிக்,கொடுமையான ஆட்சி முறை கொண்ட ஒரு அரசாங்கத்திற்கு உதவி செய்து வயிறு வளர்க்கும் தேசத்துரோகிகளை உற்பத்தி செய்யும் இயந்திரங்களாகத்தானே இருக்கிறதே யல்லாமல் வேறென்ன இருக்கிறது?

சாதாரணமாக ஆரம்பாசிரியர்கள் என்கிற பெயரையேயாருக்கு உபயோகப்படுத்தலாமென்றால் முதலில் நமது பெண்மக்களுக்குத்தான் உபயோகப்படுத்தலாம். ஏனெனில் நமது குழந்தைகளுக்கு ஆரம்பாசிரியர்கள் அவர்களுடைய தாய்மார்களாகிய நமது பெண்களே ஆவார்கள். அக்குழந்தைகளுக்கு 6, 7 வயது வரையிலும் தாய்மார்களே தான் உபாத்தியாயர்களாக இருக்கிறார்கள். மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களிலும் இவை தான் காணப்படுகிறது. எனவே,

இரண்டாவதாகத்தான் நீங்கள் ஆசிரியர்கள் ஆவீர்கள். நீங்களிருவரும் எப்படிப் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றீர்களோ அப்படியே அவர்கள் தேசத்திற்கும் தேச நன்மைக்கும், ஒழுக்கத்திற்கும்உரிய மக்களாய் வாழக்கூடும். எனவே தேசம் மக்களாலும், மக்கள் ஆசிரியர்களாலும் உருப்பட வேண்டியிருக்கிறது. ஆனால் அப்பேர்பட்ட ஆரம்பாசிரியர்களாகிய பெண்களோ நமது நாட்டில் பிள்ளை பெறும் இயந்திரங்களாகஇருக்கின்றார்கள். அவர்களுக்குஎதாவது அறிவுண்டாக நாம் இடங்கொடுத்தாலல்லவா பிள்ளைகளுக்கு அறிவுண்டாக்க அவர்களால் முடியும். ஆகவே, அந்த முதலாவது ஆரம்பாசிரியர்களின் போக்கியதை இப்படியாய் விட்டது. அடுத்தாற் போலுள்ள இரண்டாவது ஆரம்பாசிரியர்களாகிய உங்கள் யோக்கியதையோ, உங்கள் வயிற்றுப்பாட்டுக்கே கான்பான்ஸ் கூட்டவேண்டியதாகப் போய் விட்டது. உங்கள் இருவர்களாலும் கற்பிக்கப்படபோகிறபிள்ளைகள்எப்படித்தக்க யோக்கியதை அடைய முடியும். கல்வியென்பதுவயிற்றுப்பிழைப்புக்காகமாத்திரமல்ல அது அறிவுக்காகவும் ஏற்பட்டது என்பதாக நாம் எடுத்துக் கொண்டால் மக்கள்சுயமரியாதையோடும் சுதந்தரத்தோடும், மற்ற மக்களுக்குஇன்னல் விளைவிக்காமலும், அன்பு, பரோபகாரம் முதலியவைகளோடு கண்ணியமாய் உலகவாழ்க்கையை நடத்தத் தகுந்த ஞானமும்உண்டாகத்தக்கதாக இருக்கவேண்டும். இவைகளை யறிந்தே வள்ளுவரும் "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும், கல்லாதார் அறிவில்லாதார்" என்றும், "தாம் இன்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்றும் "ஒத்ததறிவான் உயிர் வாழ்வான், மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்." என்றும் சொல்லியிருக்கிறார். இதற்கேற்ற கல்விக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள். நாய்க்குநாலு கால், பூனைக்கு வாலுண்டு, கண்ணில்லாதவன்குருடன், திருடாதே, அடிக்காதே, என்று சொல்லிக் கொடுப்பதினால் என்ன பலன்ஏற்பட்டுவிடக் கூடும். இவைகள் எல்லாம் குழந்தைகள் தானாகவே படித்துக் கொள்ளும். ஒருவனை அடித்தால் அவன் திரும்பி அடித்து விடுவான். ஒருவனை வைதால் அவன் திரும்பி வைதுவிடுவான். திருடினால் பிடித்து நன்றாக

உதைத்துவிடுவார்கள். என்பதும்நாயும்பூனையும் கண்ணில் பார்க்கும்போதே கால் எவ்வளவென்பதும் வாலுண்டென்பதும் தெரிந்து கொள்ளுவான். இதற்காக இவ்வளவு பெரியஆர்பாட்டமும், பணச்செலவும்மெனக்கேடும் வேண்டியதில்லை யென்பதே நமது அபிப்பிராயம். நீங்கள் முதலில் மக்களுக்கு சுயமரியாதை இன்னதென்பதைக் கற்றுக் கொடுக்க வேண்டும். மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்கவேண்டும். சமத்துவத்தைக்கற்றுக்கொடுக்கவேண்டும். மக்களிடத்தில் அன்பு இருக்கக்கற்றுக் கொடுக்க வேண்டும். தேசாபிமானத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இவைகளில் ஏதாவது உங்களால் கற்பித்துக் கொடுக்கப் படுகிறதா? வென்பதை உங்கள் மனதையே கையைவைத்துக் கேட்டுபாருங்கள். நீங்கள் மாத்திரமல்ல. உங்களை விட பெரிய சகலகலாவல்லபர்களிடத்தில் படித்து எம். ஏ. டாக்டர் முதலியபட்டங்கள் பெற்ற பையன்களும், ஒரு காப்பிக்கடைக்குப் போனால் தனது சுயமரியாதையற்று அங்கு எச்சில் கிண்ணம் தூக்குபவனைக்கண்டு "சாமி ஒரு கப்காப்பிகொண்டுவா" என்றுகூப்பிடுகிறான். தான் மோட்சத்திற்குப் போவதற்கு மற்றொருவன் கையில் பணத்தைக் கொடுத்து அவன்காலில் விழுந்து கும்பிடுகிறான். தன் தேசத்தையும், மக்களையுங் காட்டிக்கொடுத்து வயிறு வளர்ப்பதில் போட்டி போடுகிறான். இந்தப் பட்டமெல்லாம் கல்வியாகுமா? இதைப்பெற்றவர்களெல்லாம் படித்தவர்களாவார்களா? வண்ணான், அம்பட்டன் தச்சன், கொல்லன், சக்கிலி முதலியோர் எப்படித் தங்கள் தங்கள் தொழிலைக் கற்றுத் தேர்ந்திருக்கிறார்களோ அப்படியே தற்காலம் பி. ஏ., எம். ஏ. என்ற படித்தவர்கள் என்போர்களும் அந்தப் பாடத்தைக் கற்றவர்களாவார்கள்- வண்ணானுக்கு எப்படி சரித்திரப்பாடம் தெரியாதோ அப்படியே பி. ஏ. படித்தவர்களுக்கு வெளுக்குந் தொழில் தெரியாது. அம்பட்டனுக்கு எப்படி பூகோளம் தெரியாதோ அப்படியே எம். ஏ. படித்தவனுக்குப் பிரத்துக்ஷவரம் செய்யத் தெரியாது. சக்கிலிக்கு எப்படி இலக்கண இலக்கியங்களும், வேத வியாக்கியானங்களும் தெரியாதோ அப்படியே வித்வான்களுக்கும், சாஸ்திரிகளுக்கும், செருப்புத்தைக்கத்தெரியாது ஆகவே வண்ணான், அம்பட்டன், சக்கிலி முதலியோர்களை விட பி. ஏ., எம் ஏ. சாஸ்திரி, வித்துவான் முதலிய பட்டம் பெற்றவர்கள் ஒரு விதத்திலும் உயர்ந்தவர்களுமல்லர், அறிவாளிகளுமல்லர், உலகத்திற்கு அனுகூலமானவர்களுமல்லர். இவைகளெல்லாம் ஒரு வித்தை அல்லது தொழில் தானே தவிர அறிவாகாது. இவ்வளவும் படித்தவர்கள் முட்டாள்களாகவும், சுயநலக்காரர்களாகவும், சுயமரியாதையற்றவர்களாகவும் இருக்கலாம். இவ்வளவும் படியாதவர்கள் பரோபகாரியாகவும், அறிவாளிகளாகவும், சுயமரியாதையுள்ளவர்களாகவும் இருக்கலாம். எனவே இதுகளல்ல கல்வியென்பது நமக்கு விளங்க வில்லையா? நமது நாட்டின் கேட்டிற்கும், நிலைமைக்கும் முதல் காரணம் தற்கால கல்வி முறையென்பதே எனது அபிப்பிராயம். முற்காலத்தில் பனை ஓலையில் எழுதித் திண்ணைப் பள்ளிக்கூடத்திலுட்கார்ந்து படித்த படிப்பை விட, தற்காலப்படிப்பு மக்களுக்கு என்னநன்மை செய்துவிட்டது? ஓலைச்சுவடியும், எழுத்தாணியும், ஆற்று மணலும் போய்க் காகிதக் குப்பைகளுக்கும் பெரும் பெரும் புத்தகங்களுக்கும், இங்கி பெட்டி, பேனா, பென்சில்களுக்குமாக நமது பணங்கள் சீமைக்குப்போக ஏற்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறுபலனுண்டா? படிப்பில்லாத என்கிற முற்காலத்து மக்களைவிட படிப்புள்ள என்கிற தற்காலத்து மக்கள் ஒழுக்கத்தில் எவ்விதம் உயர்ந்திருக்கிறார்கள்? படிப்பில்லாத காலத்தை விட அன்பில், அன்னியோன்யத்தில், நம்பிக்கையில், படிப்புள்ள மக்கள் என்ன உயர்ந்திருக்கிறார்கள்? முன் காலத்தில் ஒருவன் வாங்கின கடனைக்கொடுக்காவிட்டால் அவன் வீட்டு வாயிலில் ஒரு பசுவையும் அதன் கன்றையும் தீனிபோடாமல் கட்டிவிடுவது வழக்கம். இந்தப் பட்டினியின் பாவத்திற்கஞ்சி பென்ஜாதியின் காலியை விற்றாவது கடனைக்கொடுத்து விட்டுத்தான் வீதிப்புறம் நடப்பான் என்று எனது தகப்பனார் சொல்லியிருக்கிறார். கல்வி ஏற்பட்ட காலமாகிய இப்பொழுது அம்மாதிரி செய்தால் படித்தவர்கள் என்கிற வக்கீல்கள் பாலைக் கறந்து நமக்குக் கொண்டுவந்து கொடுத்துவிடு பாவம் வந்து உன்னை என்ன செய்துவிடும் பார்க்கலாம் என்று தைரியம் சொல்லி ஏமாற்றி வழி காட்டி வருவார்கள். இதனாலேயே தற்காலம் எத்தனை மேஜிஸ்ட்ரேட் கச்சேரி, எத்தனை முனிசீப் கோர்ட்டு, எத்தனை செஷன் ஹைகோர்ட், எத்தனை போலீஸ் கச்சேரி ஏற்பட்டிருக்கிறது பாருங்கள். இவைகளெல்லாம் படிப்பில்லாத என்கிற முற்காலத்தில் இருந்தனவா? படிப்பு என்னும் தற்காலக் கல்வி முறையல்லவாமக்களை இவ்வளவு ஒழுக்கஹீனமாகநடக்கத்தூண்டி அல்லல் படுத்தி நாட்டையும், சமூகத்தையும் பாழ்ப்படுத்தி வருகிறது.

## தொழிற்கல்வி.

சகோதரர்களே!

அறிவு கல்வியின் யோக்கியதை இப்படியானால், தொழிற் கல்வியின் யோக்கியதை இதை விட மோசமாக விருக்கிறது. தொழிற் கல்வி என்னும் பெயரால் தற்காலம் நமது பணமும், நேரமும், மக்களின் அறிவும் வீணாவதல்லாமல் வேறென்ன பலனைக் கண்டோம். தற்கால பள்ளிக்கூடங்களில் தொழிற்கல்வி யென்ற பேருடன் கற்றுக் கொடுக்கும் தொழிற் கல்வி முறையும், கொஞ்சமும் சரியானதல்ல. கொஞ்சகாலமாகத் "தேசியக்கிளர்ச்சி" ஏற்பட்டதின் பலனாய் ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் தொழிற் கலவி என்பதாகச் சொல்லி, தச்சு வேலையும், விவசாயமும், ராட்டினம் சுற்றுதலும் நெசவு நெய்தலும் முதலிய வேலைகளுக்கென்று அனாவசியமாய்ப்பணத்தையும், நேரத்தையும் பாழ்ப்படுத்தப்படுகின்றன. வக்கில் மகனுக்கும், ஜட்ஜ் மகனுக்கும், மிட்டாதார் மகனுக்கும், வியாபாரி மகனுக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் மகனுக்கும ஒருங்கே உட்காரவைத்து சில மணிநேரம் தச்சுவேலை கற்றுக்கொடுப்பதாலும், ராட்டினத்தைச் சுற்றச்சொல்லுவதாலும் என்ன பயன் விளையக்கூடும்? எல்லாத்தொழிலும் கற்றிருக்கட்டும் என்பதற்காகவே சொல்வோமானால் இந்த இரண்டு மூன்று தொழிலாலேயே உலகத் தொழில் எல்லாம் தெரிந்துவிடுமா? ஜீவனோபாயத்துக்கு என்றுசொல்வோமானால் மேற்கண்ட பிள்ளைகளெல்லாம் இந்தத்தொழிலை ஜீவனோபாயத்திற்காக ஏற்று ஜீவிக்கமுடியுமா? ஆகவே அறிவுக்காவது, ஜீவனத்திற்காவது இந்தத் தொழில்கள் இப்பிள்ளைகளுக்கு உபயோகப்படுகிறதா? உயர்தரப் பாடசாலை என்பவைகளில் சயன்ஸ் என்றும், சரித்திரம் என்றும் எதை எதையோ பணத்தையும், காலத்தையும் செலவழித்துச் சொல்லிக் கொடுத்து உருப்போடச்செய்து கற்றுத்தேர்ந்தபிறகு 30 ரூபாயுக்கு எவின் வேலை செய்து படிப்பினுடைய சக்தியையும் அறிவையும் கொண்டல்லாமல் மேலெஜமானனுக்கு மானத்தையும், மனச்சாட்சியையும் விற்று நல்ல பிள்ளையாவதன் மூலம் சம்பளத்தை உயர்த்தி, வாங்கிய சம்பளத்தில் வாழ்ந்து தன் காரியத்தைப் பார்த்துக்கொண்டதோடு, சாவதல்லாமல் வேறு ஏதாவது பல்குத்துகிற துரும்புக்காவது உதவப்படுகிறதா? அல்லது அந்தத் தொழிலுக்காவது இந்தப்படிப்புகள்உபயோகப்படுத்தப்படுகிறதா? அதுபோலவேஇக்கைத்தொழில்களும் வாழ்வுக்கோ, பிழைப்பிற்கோ உபயோகப்படாமல் போகிறது. கைத்தொழில் கற்றுக்கொடுப்பதென்றால் கூடுமான வரையில் பிள்ளைகளின் இயற்கை அறிவிற்கும், வாழ்கைக்கும் தக்கபடி தரந்தரமாகப் பிரித்து அததுகளுக்குத்தகுந்த தொழில்களைச்சொல்லிக்கொடுத்து அதை அவர்களுக்கு உபயோகப்படும் படி செய்யவேண்டும்.

பெண்களுக்கு ராட்டிணம் சொல்லிக் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆண்பிள்ளைகளுக்கு கதரைக்கட்டச் செய்வதும், கதரை ஆதரிக்கவேண்டிய அவசியத்தைச் சொல்லிக் கொடுப்பதும் ராட்டினத்தை விட முக்கியமானதாகும். அதை விட்டுவிட்டு உபாத்தியாயரும் கதர் கட்டாமல் பிள்ளைகளையும் கதர் கட்டச் செய்யாமல், இவர்களின் எஜமானர்களாகிய தாலூகா போர்டு, ஜில்லா போர்டு முதலிய தலைவர்களும் அங்கத்தினர்களும் கதரைக்கட்டாமல் பொது ஜனங்களின் வரிபபணத்தை அள்ளி வெறும் ராட்டிணத்தை வாங்கி பிள்ளைகளின் நேரத்தையும் பஞ்சையும் வீணாக்கி நூலைக்குப்பையில் போடுவதில் லாபமென்ன? கதர் கட்டுவதின் அவசியத்தை அறியாத ஒரு பையன் ராட்டிணம் சுற்றுவதில் பிரயோஜனமென்ன? கதரைக் கட்டாத உபாத்தியாயர்கள் கதரைக் கட்டும்படி உபதேசம் செய்வதில் பிரயோஜனமென்ன? 1000 பெரய் ராட்டிணம் சுற்றி நூல்களைக்குப்பையில்போடுவதைவிட 100 பிள்ளைகள் கதர் கட்டுவது மேலான தர்மம். ஆகவே இம் முறைகள் காரியத்துக்கு உத

இதன் தொடர்ச்சி 11 பக்கம் பார்க்க.

## திருவண்ணாமலை கோயிற்பிரவேச வழக்கு நிதி கணக்கு.

இவ்வூர் ஐக்கிய இந்திய சங்கத்தின் 6-வது கூட்டம் திரு. மு மு. நா. வெங்கிடாசலம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், பல அறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இறுதியாக திரு. பெரியய்யா அவர்கள், நமது தமிழ் நாட்டில் நிகழும் சுய மரியாதைப் போராட்டம் பற்றி சில நிமிடம் பேசி, 13-3-27ல் வெளிப்போந்த 'குடி அரசு' தலைமைக் கட்டுரையைப் படித்துக் காட்டி இங்கிருந்து பணமனுப்ப வேண்டுமென்று விளக்கமாகப் பேசினார்கள் சபையோரிடையில் உலாந்தா ரூபாய் (83) வரை வசூலிக்கப்பெற்றது. விபரம் கீழ்க்காண்க:—

மைடான் டில்லி வசூல்.

ஸ்ரீமான்கள்.

| | | |
|---|---|---|
| கரு. பெரி. பெரியையா உலாந்தாரு | | 25 |
| கரு. குமு. சோம சுந்திரஞ் செட்டியார் | ,, | 10 |
| கோ. முருகையா | ,, | 5 |
| எம். ஜோசப்தாஸ் | ,, | 5 |
| வி, சுப்பையாவு | ,, | 5 |
| நா தெ. சண்முகம் செட்டியார் (லெம்பு பாக்கம்) | ,, | 5 |
| வெ. பெரி. பெரிய கருப்பஞ் செட்டியார் (பிசியாந்தார்) | ,, | 5 |
| சுபா. லெ. சொ சுப்பய்யா பிள்ளை (லங்காட்) | ,, | 5 |
| சோமசுந்திரஞ் செட்டியார் | ,, | 4 |
| நா. சி. த. சிதம்பரம் பிள்ளை | ,, | 3 |
| சே. க. சின்னமுத்து | ,, | 3 |
| ராம். அழ, கடம்பவனம் | ,, | 2 |
| மு. மு. நா. வெங்கடாசலம் செட்டியார் | ,, | 2 |
| உதுமான் மரக்காயர் | ,, | 2 |
| ம. சுப்பய்யா | ,, | 1 |
| மு. மு. பழ. சுப்பய்யா பிள்ளை | ,, | 1 |
| ஆக உலாந்தா ரூபாய் | | 83 |

க்கு இந்தியா ரூபாய் 91-க்கும் உண்டியல் ஒன்று இத்துடன் அனுப்பிருக்கிறோம். இச்சிறு தொகையை மன மகிழ்ச்சியிடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். பார்ப்பனக்கொடுமையைத் தொலைக்கத் தோன்றிய இவ்வழக்குக்கு, நமக்கு சுயமரியாதை நல்க எழுந்துள்ள இவ்வழக்குக்கு தனித் தமிழர் ஒவ்வொருவரும் தத் தம் மாலியன்ற உதவி செய்யத் தாமதியாரென்று எண்ணுகிறோம்.

சுயமரியாதை எழுக! பார்ப்பனீயம் தொலைக.

ஜோஸப்தாஸ்,
கௌரவ காரியதரிசி.
ஐக்கிய இந்திய சங்கம்.

ஷை உலாந்த ரூபாய் 83-க்கு இந்தியா ரூபாய் 91 ப உண்டியல் மூலம் வந்தனத்துடன் வரப்பெற்றோம். இதை இந்நிதி போக்ஷகர் திருவாளர் என். தண்டபாணி பிள்ளை அவர்களுக்கு அனுப்பியாய்விட்டது.

(ப—ர்.)

## தஞ்சை பார்ப்பனரல்லாதார் மகாநாடு

தஞ்சை பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு சென்னை பிரமுகர்களும் மற்றும்தஞ்சைப்பார்ப்பனரல்லாதார் மக்களும் தவறாமல விஜயம்செய்ய வேண்டுகிறோம்.

## "சிவாஜி நாள்,"

பார்ப்பனர்களுடன் சேர்ந்து சிவாஜி நாளைக் கொண்டாடுவது ஓட்வியருடன் சேர்ந்துகொண்டு, ஜாலியன் வாலாபாக் நாளைக் கொண்டாடுவதுபோலாகும்.

திராவிடன்.

சிங்கப்பூர் ஸ்ரீமான் கோ. சாரங்கபாணி நாயுடு, கோபால், ராஜகோபால், சுப்பையா, கோவிந்தசாமி, வெங்கிடாசலபதி ஆகியவர்களாலும் மற்றும் சில ஜோகூர் "குடி அரசு" அபிமானிகளும் சேர்ந்து கீழ்க்காணும் கனவான்களை "குடி அரசு"க்கு சந்தாநேயர்களாகச் சேர்த்துக்கொடுத்திருக்கிறார்.

சிங்கப்பூர்

181 எம். குஞ்சம் பிள்ளை
182 டி குப்பம்மாள்
183 பி வி தியாகராஜன்
184 ஆர் கோவிந்தசாமி
185 ஏ எஸ் டி எம் ஆர் எம் கருப்பன் செட்டியார்
186 KR PR AL. நம்மாள்வார்
187 எஸ் செல்லப்ப செட்டியார்
188 ரெவரெண்ட் எஸ் பாக்கியநாதன்
189 KR VR. முருகப்பசெட்டியார்
190 கே எம் நடேச படையாச்சி
191 எஸ் மாரியப்ப ஓந்திரியார்
192 ஏ வி இருளப்பன் பிள்ளை
193 ஆர் அப்பாபூ நாயுடு
194 கே ராமலிங்க தேவர்
195 டி காத்தையா
196 கே ஆர் ராமைய சேர்வை
197 எஸ் மகமது தாவூத்
198 என் பி ரத்னசாமி பண்டாரம்
199 கே எம் எஸ் பி மலைக்கண்ணுபிள்ளை
200 RM VR M முத்தைய செட்டியார்
201 எம் அப்துல் லத்தீப்
202 ஸி எம் வாஞ்சூர் சாயபு
203 ஆர் சச்சிதானந்தம்
204 எம் ஆர் முத்து கண்டியார்
205 ஏ ஷண்முகம் பிள்ளை

ஜோகூர் சந்தாதார்

206 எம் என் முத்துராமசாமி பிள்ளை
207 ராமசாமி நாடார்
208 ஏ அப்துல் அமீத்கான்
209 எஸ் ஏ பெரியசாமி நாடார்
210 எம் ரத்னம்
211 எஸ் ஆர் என் நாகலிங்கம் பிள்ளை
212 பி என் பி. நடேச முதலியார்
213 கே ஏஸ் ராமநாத ஐயர்,
214 என் ஆறுமுக நாடார்
215 எம் கே. சித்திரம் பிள்ளை

சிங்கப்பூர்

216 ஜி. துரைசாமி பிள்ளை
217 கே எஸ் சிவம்
218 ஜி ரெங்கசாமி
219 ஆர் எம் நாராயண பத்தர்
220 எஸ் தாஸ்
221 என் ஆறுமுகம் பிள்ளை
222 என் துரைசாமி காளிங்கராயர்
223 டி வெங்கிடாசலம் சேர்வை
224 எஸ் வீராசாமி பண்டிதர்
225 ஆர் முருகையா
226 ஒ பி கருப்பைய பிள்ளை
227 என் குழந்தசாமி நாட்டார்
228 எம் எஸ் ஹாஜாமைதீன்
229 ஆர் ஸ்ரீனிவாசம் பிள்ளை
230 ஆர் எம் பக்கிரிசாமி
231 ஆர் எஸ் ராஜகோபால் பத்தர்
232 எம் சுந்தரம் பிள்ளை
233 எஸ் பெருமாள் ராஜா
234 என் கோவிந்தசாமி பிள்ளை
235 வி ராஜகோபால் பிள்ளை
236 ஆர் எம் ஆர்கே வேணுகோபால் [நாயுடு
237 கே வேலு பிள்ளை
238 பிஎல் எம் எம் மெய்யப்ப செட்டியார்
239 பிஆர் கேஆர் கருப்பையா பிள்ளை
240 வி சி டி ஆர்எம் ராமநாதன்
241 இந்தியா அசோசியேஷன்
242 எம் கண்ணப்பன்
243 எம் மாரியப்ப பிள்ளை
244 ஆர் பாக்கியசாமி நாயுடு
245 கே வரதராஜுலு நாயுடு

குறிப்பு:— மேல்கண்ட கனவான்களுக்கு தமிழ் மக்கள் சுயமரியாதையின் சார்பாக நாமநமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## நாடார் குல மித்திரன் க்ஷேம நிதி லாட்டரி.

பிரைஸ் எடுக்கும் நாள் நெருங்கி விட்டது. "நாடார் குலமித்திரனின் அபிவிருத்தியைக் கோறி நடத்தப்படும் இந்த லாட்டரியை எல்லோரும் சிறப்பாக நாடார் குல சகோதரர்களும் ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## ஓர் அறிவிப்பு.

எல்லா தெய்வங்களும் ஒன்றுதான். அல்லாசாமியின் அருள் பெற்ற பிஷாவர் சாது சப்தாகான் அவர்கள் உபதேசத்தால் விஷவஸ்து என்பதே இல்லாததுமானதும், எறக்குறைய நற்சுவைபொருந்தியதுமானசில நூதன யூனானிமுறை மருந்துகளையும், நான் தெரிந்து கொண்டேன். 1-5-27 முதல் சிறிது சிறிதாக இதன் விஷயம் ஏற்படக்கூடிய நன்மையை அவரவர்கள் கொண்ட பொருளுக்கு இசைவாக கேட்போர்க்கு செய்திட உத்தேசம் கொண்டிருக்கிறேன். சொல்பமாக தயார் செய்யும் சில மருந்துகளை அக்கரையுள்ளவர்கள் கிரயத்திற்கு வாங்கி ரசாயன பரீட்சை செய்து கொள்ள எண்ணம் வைப்பவர்களுக்கு எமது வேலையை சுலுவு செய்தவர்களென்று நாங்கள் என்றும் வந்தனமளித்தவர்களாக இருப்போம் என்று கோயமுத்தூர் 4, தெலுங்கு வீதி, எஸ். ஆர். ஸ்ரீனிவாசன் எழுதுகிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு சித்திரை-மீ 19-உ

## நமது பத்திரிகை.

சகோதர வாசகர்களே!

நமது "குடி அரசு" ஆரம்பமாகி இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருடத்தின் முதல் இதழ் இன்று வெளியாகிறது. குடி அரசு ஆரம்ப இதழில் "குடி அரசு" என்று ஒரு தலையங்கமும், ஆறு மாதம் கழிந்து "நமது பத்திரிகை" என்று ஒரு தலையங்கமும் ஒரு வருஷம் முடிந்து இரண்டாவது வருஷ ஆரம்பத்தில் "நமது பத்திரிகை" என்று ஒரு தலையங்கமும் எழுதி இருக்கிறோம்.

இப்போது இரண்டு வருஷம் முடிந்து மூன்றாவது வருஷ ஆரம்ப முதல் இதழிலும் அவ்வாறே நமது "பத்திரிகை" என்று தலையங்கமிட்டு ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம்.

நமது நாட்டு மக்களுக்குள் சுயமரியாதையும்? சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் உண்டாக்க "குடி அரசு" என்னுமொரு பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதல் முதல் நானும் எனது நண்பர் ஸ்ரீமான் தங்கபெருமாள் பிள்ளையும் 1922ல் கோயமுத்தூர் ஜெயிலில், சிறை வாசம் செய்யும்போது நினைத்தோம்.

அது வெளியில் வந்த கொஞ்ச நாட்களுக்குள் "குடி அரசு" என்று ஒருவாரப்பத்திரிகையும் ".....நா" என்று ஒரு மாதந்திரிகையும் நடத்தப்போவதாய் 19-1-23 தேதியில் ..... ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

இவ்விஷயத்தில் ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களிடம் சொன்னேன். அவர் எனது கொள்கையை கேட்டவுடன் சந்தோஷப்பட்டு "இப்படி ஒரு பத்திரிகை வேண்டியதுதான். அதற்கு ..... நீ ஆரம்பித்தால் ..... நெய்யிரக்கணக்கான சந்தாதாரர்கள் .....வார்கள். ஆனால், அதிக நாள் நிலைக்காது. ஒரு கூட்டத்தார் எப்படியாவது அதை ஒழித்து விடுவார்கள். ஆனாலும், நடந்தவரை லாபம், நடத்துங்கள்" என்றார்.

பிறகு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களிடம் சொன்னேன். அவரும் மிகச் சந்தோஷப்பட்டுச் "சீக்கிரத்தில் வெளியாக்க வேண்டுமென்று விரும்புவதாகவும், வெளியாகத்தாமதமேற்பட்டால் அதுவரை தனது பத்திரிகையில் வேண்டுமானாலும் எழுதி வரும்படியும் சொன்னார்.

பிறகு ஸ்ரீமான் ஸி. ராஜகோபாச்சாரியார் அவர்களிடம் சொன்னேன். அவர் "இந்தச் சமயம் இப்படிப்பட்ட பத்திரிகை கூடாது. அல்லாமலும் மகாத்மா ஜெயிலில் இருக்கும் போது இதைவிட்டு விட்டு நீ பத்திரிகை நடத்தப்போவது சரியல்ல. உன்னுடைய சேவை இதுசமயம் மிகவும் அவசியமானது. ஆனதால் கண்டிப்பாய்ப் போகக்கூடாது" என்று சொல்லிவிட்டார். அதன் பேரில் அந்த எண்ணத்தை ஒத்தி வைத்து விட்டு மறுபடியும் ஒத்துழையாமைக்காகவே உழைத்தேன். தற்செயலாய் வைக்கம் சத்தியாக்கிரகம் ஏற்பட்டது. ஸ்ரீமான் ஜார்ஜ்ஜோசப் அவர்களும், வைக்கத்திலிருந்து "என்னைப் பிடிக்கப் போகிறார்கள் நான் இதோ ஜெயிலுக்குப் போகிறேன் வேறுயாரும் இல்லை. நீ வந்து ஒப்புக்கொள்" என்று எழுதின கடிதமும் தந்தியும் என்னைக் குடும்பத்துடன் வைக்கத்திற்குப் போகும்படி செய்து விட்டது. அங்கு ஜெயிலில் இருக்கும்போதும் இதே எண்ணம்தான். அதாவது வெளியில் போனதும் பத்திரிகை நடத்த வேண்டும் என்கிற ஆவல் அதிகமாயிற்று. அதுபோலவே வெளியில்வந்ததும் பத்திரிகை ஆரம்பிக்கத் தீர்மானித்து விட்டேன். அதற்கேற்றாப்போல் திருப்பாப்புலியூர் ஞானியார் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞான சிவாச்சார்ய சுவாமிகளும் கோயம்புத்தூருக்கு வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களை இங்கு அழைத்து அவர்களைக் கொண்டே ஆரம்ப விழா நடத்தி விடலாம் என நினைத்து, கோயம்புத்தூர் சென்று அழைத்ததும், யாதொரு ஆக்ஷேபணையும் சொல்லாமல் அவர்கள் ஒப்புக் கொண்டு ஈரோட்டிற்கு வந்து, ஆரம்ப விழா நடத்திக்கொடுத்தார்கள். அது சமயம் பத்திரிகாலயத்தைத் திறந்து வைக்கும்படி ஞானியார் சுவாமிகளை கேட்டுக்கொண்ட போது.

"அநேக பத்திரிகைகள் நமது நாட்டிடை இருந்தாலும் அவைகள் தங்கள் மனச்சாக்ஷிக்கு உண்மை என்று பட்டதை தெரிவிக்க அஞ்சுகின்றன. அதனால் தான் நான் இப்பத்திரிகை ஆரம்பிக்கிறேன். மற்றப் பத்திரிகை போலல்லாமல் மனதில் பட்டதைத் தைரியமாய்ப் பொது ஜனங்களுக்கு உள்ளது உள்ளபடி தெரிவிக்க வேண்டுமெனபது எமது நோக்கம்" என்று சொல்லி இருக்கிறேன். ஞானியார் சுவாமிகளும் பத்திரிகாலயத்தை திறந்தபோது,

"நமது நாட்டில் பல பத்திரிகை இருந்தும் ..... பத்திரிகை போன்ற கருத்துடைய பத்திரிகை வேறொன்றுமில்லை"

"உயர்வு தாழ்வு என்கிறஆணவம்மிகுந்திருக்கிறது" "சமத்துவம்என்றஉணர்ச்சி எங்கும் பரவவேண்டும்" "'குடி அரசின்' கருத்து இதுவே என நான் அறிந்து கொண்டேன்"

"சமயத்திலிருக்கும் கேட்டை முதலில் ஒழிக்க வேண்டும்" "இவை குடி அரசின் முதல் கொள்கையாய் விளங்கவேண்டும்" இப்பத்திரிகையில் ஸ்ரீமான் நாயக்கருக்கு எவ்வளவு சிரத்தை உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு" என்று ஆசிர்வதித்திருக்கிறார். முதல் இதழ் தலையங்கத்திலும் நமது நோக்கத்தை வெளியிட்ட தலையங்கத்திலும் நாம் குறிப்பிட்டிருப்பதாவது,

"ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும்" இதை அறவே விடுத்து வெறும் தேசம் தேசம் என்று கூக்குரல் இடுவது எமது பத்திரிகையின் நோக்கமன்று"

"மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கிவளரல் வேண்டும்" "உயர்வு தாழ்வு என்ற உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் ஜாதிச்சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாக இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென் றெண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்"...... .............................................. இன்னோரன்ன பிற நறுங்குணங்கள் நம்மக்கள் அடையப்பாடுபடுவது நமது நோக்கமாகும்"

"எவர் எனக்கு இனியர் இவர் எனக்கு இன்னார் என்ற விருப்பு வெறுப்பின்றி

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக் கண்மேச் சென்றிடித்தற் பொருட்டு" என்ற வாக்கைக்கடைப்பிடித்து நண்பரேயாயினுமாருக, அவர் தம் சொல்லும் செயலும் கேடு சூழ்வதாயின் அஞ்சாது கண்டிதொதுக்கப்படும்"..........என்று எழுதி இருக்கிறோம். இவையாவும் 2-5-25—தேதி குடி அரசில் காணலாம்.

அடுத்தபடி ஆறு மாதம் முடிந்த இதழில் 'நமதுபத்திரிகை' என்னும் தலையங்கத்திலும்,

"குடி அரசு" குறிப்பிட்ட கருத்தைப் பிரசாரம் செய்யும் பத்திரிகையே அல்லாமல் வெறும் வர்த்தமானப் பத்திரிகை அல்லவாதலால்...........பிரதிவாரமும் 'குடி அரசு தனது ஆத்மாவை வெளிப்படுத்தும் (தத்துவத்தை விளக்கும்) போது கண்ணீர் கொட்டாமலிருக்க முடிவதே இல்லை. இதன் பலனால் உயர்ந்தோர் என்று சொல்லிக்கொள்வோராகிய பிராமணர் முதலிய சமூகத்தாருக்கும், ராஜீயத் தலைவர் என்று சொல்வோராகிய பல ராஜ தந்திரிகளுக்கும், விரோதியாகவும் அவர்களுடைய சூழ்ச்சிகளுக்கும் நமது 'குடி அரசு' ஆளாக வேண்டியிருப்பதால் இது சீக்கிரத்தில் பாமர ஜனங்களின் செல்வாக்கைப் பெற முடியாமலிருப்பது ஆச்சரியமல்ல' என்றும்'

"உண்மையில் 'குடி அரசு'க்கு எந்த பிராமணனிடத்தும் குரோதமோ வெறுப்போ கிடையாது. ஆனால் பிராமணன் உயர்ந்தவன் என்றும், மற்றவர்கள் தீண்டாதவர்கள், தெருவில் நடக்கக் கூடாதவர்கள் என்பன போன்ற இழிவான மிருக உரிமைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் எண்ணத்தினிடத்திலும், தங்கள் வகுப்பார் தான் முன்னணியில் இருக்க வேண்டும், மேன்மையுடன் பிழைக்க வேண்டும், மற்றவர்கள் என்றென்றைக்கும்

# தஞ்சை ஜில்லா மகாநாடுகள்.

## 1927வருடம் மேமீ 7உ 8உ (சித்திரை 25, 26உ) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாயவரத்தில் நடைபெறும்.

ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தலைவர்,
திவான் பகதூர்,
**M. கிருஷ்ணன் நாயர், B. A., B. L., M. L. C.,**

சமரஸ சன்மார்க்க மகாநாட்டுத் தலைவர்,
**திரு. வி. கலியாணசுந்திர முதலியார்,**
"நவசக்தி" ஆசிரியர்.

இளைஞர் மகாநாட்டுத் தலைவர்,
**ஜனக, சங்கர. கண்ணப்பர்,**
"ஜஸ்டிஸ்" "திராவிடன்" ஆசிரியர்.

நமது ஜில்லாவில் உள்ள பார்ப்பனரல்லாதார்களான நமக்குள் இதுவரையிருந்த அபிப்பிராய பேதங்களை விட்டொழித்து, ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் விஜயம் செய்து சிறப்புடன் நடத்திவைக்கக் கோருகிறேன்.

R. சின்னையா பிள்ளை,
வரவேற்புக் கழகத்தலைவர், மாயவரம்.

தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டு அதற்காகச் செய்யும் சூழ்ச்சிகளிடத்திலும் தான் குடி அரசுக்குத் துரோதமும் வெறுப்பும் இருப்பதுடன், அதை அடியோடே களைந்தெரிய வேண்டும் என்ற ஆவல் கொண்டு உழைத்துவருகிறது'! என்றும்.

"குடி அரசு ஏற்பட்டு ஆறுமாதகாலமாகியும், அதுவரைஆயிரத்துச்சில்லரை சந்தாதாரர்களே சேர்ந்திருக்கிறார்கள், அதனைப் படிக்க வேண்டிய அளவு ஜனங்கள் படிக்கவில்லை என்றும், பாமர ஜனங்கள் சரியானபடி குடி அரசை ஆதரிக்கவில்லையானால் அது தானாகவே மறைந்து போகவேண்டியது தான் அதன் கடமையே அல்லாமல் வியாபார தோரணையாய் நடந்து வராது." என்றும் எழுதியிருந்தது, (இதை 1-11-25 தேதி இதழிற் பார்க்கலாம்)

பிறகு ஒருவருஷம் முடிந்து, இரண்டாவது வருஷ ஆரம்பஇதழில் "நமது பத்திரிகை" என்ற தலையங்கத்திலும், "இதுவரை நமக்குள்ள 2000 சந்தாதாரர்களில் நால்வர் அதிருப்திக்கே ஆளாகிறோம் என்று எழுதிவிட்டு.

"குடி அரசு" எவருடைய தயவுக்கோ, முகஸ்துதிக்கோ, சுயநலவாழ்வுக்கோ, கீர்த்திக்கோ, நடைபெற வில்லை. யோக்கியமாய் உண்மையாய் நடக்கக்கூடிய காலம் வரை நடக்கும். அவ்விதம் நடக்க அதற்கு யோக்கியதை இல்லையானால், அது தானே மறைந்துவிடுமேயல்லாமல், மானங்கெட்டு விலங்குகளைப்போல் வாழாது". "குடிஅரசு" தோன்றிய பிறகு அது ராஜீய உலகத்திலும், சமூக உலகத்திலும், பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று பலர் நமக்கு எழுதியிருப்பதை நாமும் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம்" என்றும் எழுதி இருக்கிறோம்.

ஆகவே, இப்போது இரண்டு வருடங்கள் முடிந்து மூன்றாவது வருடம் ஆரம்பஇதழில் அதே தலையங்கத்துடன் ஒரு குறிப்பு எழுத ஆசைப்படுகிறோம். முதலாவதாக ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்துகிறோம். அதாவது "குடி அரசு" க்கு ஆறு மாதத்தில் ஆயிரம் சந்தாதாரர்களும், ஒரு வருஷத்தில் இரண்டாயிரம் சந்தாதாரர்களும்இப்போது இரண்டுவருஷத்தில் நாலாயிரத்து ஐந்நூறு சந்தாதாரர்களும் இருப்பதால் கூடுமானவரையில் தமிழ் மக்களின் ஆதரவைப்பெற்று இருக்கிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆரம்பத்திலிருந்து இது வரை முன்னாற் குறிப்பிட்ட கொள்கைகளில், அது ஒரு சிறிதும் தவறாமல் ஏற்றுக்கொண்டபடி நடந்து வந்திருக்கிறது என்பதையும் மெய்ப்பித்து விட்டோம். ஆகவே, "குடி அரசு" குறைந்தது ஒரு பதினாயிரம் பிரதிகளாவது அச்சிட்டு வெளியாக வேண்டும் என்கிற ஆசை நமக்கு இருந்தாலும் இந்நாலாயிரத்து ஐந்நூறைக்கொண்டு நான் சந்தோஷமடைகிறேனே தவிர, ஒரு சிறிதும் அதிருப்தி அடையவில்லை. அன்றியும், எமது விருப்பத்தை நிறைவேற்ற அநேக நண்பர்கள்காத்துக்கொண்டிருக்கிறார்கள்என்பதும்எனக்குத்தெரியும். 250சந்தாதாரர்களை ஏற்படுத்திக்கொடுத்தும் இனியும் இரநூற்றைம்பது சந்தாதாரர்களை ஒரு மாதத்தில் சேர்ப்பதாய் வாக்களித்த சிங்கப்பூர் நண்பர்களுக்கும், மற்றும் 250 சந்தாதாரர்களை எதிர்பார்க்கும் மலேயா நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். தமிழ் நாட்டிலும், ஊர்கள் தோரும் "குடி அரசின்" வளர்ச்சியையும் பரவுதலையும் எம்மைவிட அதிக கவலை கொண்டு எதிர்பார்க்கும் நண்பர்கள் பலர் இருக்கிறார்கள், என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் "குடி அரசு"க்காக உழைத்து வந்ததற்கும், சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்ததற்காகவும் "குடி அரசு"க்கொள்கைகளைப்பரப்பப் பாடு பட்டதற்கும், நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். "குடி அரசு"க்கு இரண்டாவது வருடத்தில் நஷ்டமில்லை. முதல் வருஷத்தின் நஷ்டம் அடைபடவேண்டும் ஆனால் இன்னமும் கொஞ்சம் நல்ல இதழில் இன்னும் நாலு பக்கம் அதிகப்படுத்த வேண்டும். என்கிற ஆவல் இருந்து வருகிறது. இககாரியங்களுக்கு இப்போது ஆகும் செலவை விட இன்னமும் வருஷம் ஒன்றுக்கு 2000ரூ அதிகமாகச்செலவு பிடிக்கும். இனியும் கொஞ்சம் சந்தாதாரர்கள் அதிகமானால் இவைகளைச் செய்ய சௌகரியமாயிருககும்.

இவ்வருடம் புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் அதிகமாய் இல்லை என்றே நினைக்கிறேன்.

பொதுவாக நமது பிரசங்கத்திலும், "குடி அரசி" லும் நான் செய்துவந்த பிரசாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன், அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதம் என்பதைக் கண்டித்தேன், மதத்தலைவர்கள் என்பவர்களைக்கண்டித்தேன், மதச்சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன், குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன், கோவில் என்பதைக் கண்டித்திருக்கிறேன், சாமிஎன்பதைக்கண்டித்திருக்கிறேன்வேதம்என்று சொல்வதைக்கண்டித்திருக்கிறேன், சாஸ்திரம் என்பதைக்கண்டித்திருக்கிறேன் புராணம் என்பதைக்கண்டித்திருக்கிறேன், பார்ப்பனீயம் என்பதைக்கண்டித்திருக்கிறேன்,ஜாதிஎன்பதைக்கண்டித்திருக்கிறேன் அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், உத்தியோகம் என்பவைகளைக்கண்டித்திருக்கிறேன், நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், நியாயாதிபதி என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன், நிர்வாகஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன், ஜனப் பிரதி நிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன், பிரதிநிதிகள் என்பதைக்கண்டித்திருக்கிறேன், தேர்தல் என்பதைக்கண்டித்திருக்கிறேன், கல்வி என்பதைக்கண்டித்திருக்கிறேன், சுயராஜ்யம்என்பதைக்கண்டித்திருக்கிறேன்,ஸ்ரீமான்கள்கல்யாணசுந்திர முதலியார், வரதராஜுலு நாயுடு சி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்து வந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்.

இன்னும என்ன என்னவற்றையோ [illegible]
[illegible]

யாரையோ கண்டித்திருக்கிறேன். கோபம் வரும்படி வைதுமிருக்கிறேன். எதைக் கண்டித்திருக்கிறேன், எதைக் கண்டிக்கவில்லை யாரை வையவில்லை என்பதுஎனக்கு ஞாபகத்திற்கு வர மாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத்திறந்தாலும் கண்டிக்கவும் வையவும் துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத்தகாத, வையத்தகாதஇயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ, என்கண்களுக்குப்படமாட்டேன் என்கிறது. இவைகளன்றி எனது வார்த்தைகளும் எழுத்துக்களும் செய்கைகளும் தேசத் துரோகமென்றும், வகுப்பு துவேஷமென்றும், பிராமணத்துவேஷமென்றும், மான நஷ்டமென்றும், அவதூறு என்றும் ராஜ துரோகமென்றும், ராஜத்துவேஷமென்றும், நாஸ்திகமென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும் ஆத்திரப்படவும் ஆளானேன். அரசியல்தலைவர்கள் தேசாபிமானிகள் தேச பக்தர்கள், என்பவர்கள் என்னை வையவும் என்னை தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான்ஏன் செய்யவேண்டும்? சிலருக்காவது மனவருத்தத்தையும், அதிருப்தியையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்யவேண்டும்? என்றுநானேயோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில் யாரோ எப்படியோ போகட்டும் நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடைய வேண்டும்? நமகென்ன இதனால் ஜீவனமா பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிகையாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவதுஉதவி யுண்டா? இமய மலைவெய்யிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாமா என்று யோசிப்பதுமுண்டு. ஆனால் விலகுவதில் தான் என்ன லாபம் ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்து விட்டது இனி நாலோ ஐந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம் இந்தக் கொஞ்ச காலத்தையேன் நமது மனச்சாட்சிக்கு விட்டுவிடக்கூடாது? விலகித்தான் என்னபெரிய காரியம்செய்யப்போகிறோம்? என்பதாகக்கருதி மறுபடியும் இதிலேயே உழன்றுகொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை.

உண்மையில் நாம் முன் சொன்ன அரசியல் மதவிஷயம் முதலியதுகளைக் கண்டிக்க நேரிட்டபோது உண்மையான அரசியல் மதஇயல் இவைகளை நாம் கண்டிக்கவே இல்லை. எதைப்பார்தாலும் புரட்டும் பித்தலாட்டமும் பெயரைப் பார்த்து ஏமாறத் தகுந்ததயிருக்கிறதே அல்லாமல் தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் கொஞ்சங்கூட ரிப்பேர் செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்க வேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப் படாவிட்டாலும் என்கிற நம்பிக்கை கொஞ்சமும் இல்லாவிட்டாலும் வேறு யாராவது மகாத்மாவைப் போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்கு பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா என்றும், அதுவும் முடியாவிட்டால் பலன் எப்படியானாலும் கடமையைச்செய்யவேண்டியது தானே என்கிற முடிவும் கிடைக்கிறது. ஆகவே இக்கஷ்டமானதும்;மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக் கூடாததுமான இக்காரியத்தில் இறங்கிவிட்டோம். உலகம் ஒப்புக்கொண்டாலும் சரி தள்ளிவிட்டாலும் சரிநமக்கு அதைப்பற்றிக்கவலையில்லை. நமது கடமையைஎப்படி நாம பிரதானமாய்க்கருதி இறங்கி இருக்கிறோமோ அதுபோலவே பொது ஜனங்களும், அதாவது இக்கடமையைச்சரிஎன்று எண்ணியவர்கள் தங்கள் தங்களது கடமையையும் எண்ணி அக்கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

## உயர்குல ஆராய்ச்சி

இவ்வுலகத்தில், உயர்குலமென்றும், தாழ்குல மென்றும், இரண்டுவகைப் பாகுபாடாக வழங்குகின்றார்கள். இவற்றில் உயர்குலமென்பது எது, தாழ்குலமென்பது, எதுவென்பதாக நாம் ஆராய்ந்து தேர்தல் முக்கிய கடமை. உயர்குலமென்பது, ஒழுக்கத்தால் மேம்பட்ட தன்மையைப் பெற்றது, என்பதாக நமது தமிழ் வேதம் வகுத்துரைத்து வைத்திருப்பதாகும். ஒழுக்கந் தாழ்வுபடுமாயின் உயர்குலமென்பதாகக் கருத வந்ததும் தாழ்குலமென்பதை நிறுவிவரையறுக்கின்றது. நமது தமிழ் வேதத்துள்ள பிரயோகங்கள் முழுமையையும் கீழ் குறிக்கின்றோம், அவையாவன:—

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'
'ஒழுக்கம் பரிந்தோம்பிக் காக்க'
'ஒழுக்கம் உடைமை குடிமை'
'பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்'
'ஒழுக்கம் இலான்கண் உயர் வில்லை'
ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்'
'ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்'
'நன்றிக்கு வித்தாகும் நல் ஒழுக்கம்'
'தீயவழுக்கியும் வாயால் சொலல்-ஒழுக்கம்
உடையவர்க்கு ஒல்லாவே'
'உலகத்தோடொட்ட ஒழுகல்'
என்பவாய இவைகள்

இவ்வதிகாரத்துக்கு மெய்புரை கண்ட அழகியாரும், ஒழுக்கம் உடைமையாவது, தமது தமது வருணத்திற்கும், நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல், இது மெய்ம் முதலிய அடங்கினார்க்கல்லது முடியாதாகலின், அடக்கம் உடைமையின் பின் வைக்கப்பட்டது, என நியாயங்கள்கூறித்தாபிக்கின்றனராவர். அன்றியும், அந்தணர் என்போர் அறவோர், எனவும், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டு ஒழுகலானுமெனவும், வேதம் முழங்கி விளக்குகின்றதாகும். அம்-தணர். அழகிய தட்பம் பெற்றவர். (தட்பமென்பது-குளிர்ந்த மனந்தாங்கப் பெற்றவரென்பது திரண்ட பொருள்) இக்கலிகாலத்திலேயோ, ஒழுக்கமும் நிலைமையும் வருணமும் ஒன்றுமில்லாமல் தவிடுபொடியாய் ஒழிந்து விட்டன. இவைகள் ஒன்று மில்லாமல் போகவே, பின்பு உயர்குல மென்பதாகப் பேசவும் வாய் எழுமா?" கிழத்தாசி பழைய சோட்டையை நினைந்து சொற்பனங்காணுதலன்றி வேறொன்றும், பயன் அடையாததைப்போல முடியுமன்றி ஆவது ஒன்றுமில்லை யென்க. இராவணச் சமர் ஆரம்பித்த இரண்டாவது யுகத்திலேயே, இந்த நான்காவது யுகமாகிய கலியுகத்தைப்பற்றி, வாலிகொண்டாடிப் போற்றிப் புகழ்வதை இங்கே ஞாபகப்படுத்தல் அவசியம். "ஊர்தரு தூரங்கின்மாடே கலியது காலம் வந்து பரவிற்றே"யென யூகிக்கின்றனராவர். கலிகாலம் வந்து அடுப்பின் தருமம் அதருமம் என்பதாகவும் அதருமம் தருமம் என்பதாக மாறுதல் அடையும் என்றபடி ஆகவே கலியின் துவக்கத்திலேயே பார்ப்பனப் பழக்கம், எற்பன வழக்கமாக முடிந்து, காடும், நாடும், ஓடு எடுக்கும் முடிவுக்கும் வந்துவிட்டது. இன்னும், கலி, வளர வளரத் திருவும், உருவும், பார்ப்பனர்களாற் கெட்டுச் சீர்குலைந்து, ஏனையவர்களை மிக இழிந்த நிலைமைக்குக் கொண்டு வந்து வைத்திடுதல் மிகத்தெளிவாம். ஆகையால் நம்மவர்கள் ஒவ்வொருவரும், அவர்களது வஞ்சசூழ்ச்சி முதலிய செயல்களை யூகித்துத் தன்னலமா, பிறர் நலங்கருதியதா, வென்பதை நனித்துணருதல் வேண்டும். பார்ப்பான் என்பதற்குப் பொருளாவது, வேதாகமங்களை நினைத்துப் பார்ததுக்கும், அதற்குத்தக்கபடி எல்லாம் வல்ல சர்வக்ஞப் பொருளை ஞான திருஷ்டியால் பார்த்தலுக்குமே பார்ப்பான் என வந்ததாகும். மேலே காட்டிய, 4-வது மஹா வாக்கியத்தில் பார்ப்பான் பிறப் பொழுக்கங்குன்றக் கெடும்—எனத் தீர்மானமுங்கண்டு விட்டோம். இஃதன்றி மாகோபநிஷத்தில் கலியின் உற்பவத்தில், பாம்பின் பிறப்புத் தோற்றத்துக்குரிய செயல்களே, உருவம் பெற்று நிலவுலகில், பாப்பு—எனத் தோற்றிச் சீரும் நேருஞ்சிதைந்து காணப் பெறுமென காணக்கிடக்கின்றது. வேம்பு காய்—என்பது வேப்பங்காய் என ஒன்றுபட்டுத் தொடர் மொழி நிற்பதைப் போலப்—பாம்பு அனர், பாப்பனர் என்பதாக ஆகிக், கலியின் தோற்றத்தைக் காண்பிக்க இடையில் ரகர மெய் ஒன்றுபட்ட தொடர் மொழியாக நின்று ஊரையும் பேரையும் உருக்குலைக்க வந்ததாகும்.

இங்ஙனம் கூறுவதெல்லாம் ஒழுக்கங்குன்றிய மாசுடையவர்களையேயன்றி, ஒழுக்கம் நிரம்பிய மஹான்களைப் பற்றியதல்ல வென்பதாம். ஒழுக்கங்குன்றிய மாசுடையார்களது குறைகளைக் கூறிக் களைதல், நமது சகோதர நட்புரிமை யென்பதைக்கீழ்வரும், அருமைத்திருக்குறட் பாவைப் படித்து, அமைந்து மகிழ்வாராக.

நகுதல் பொருட்டன்று, நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு—என்பதே.

இங்ஙனம்
நீலாசலத்துக் குன்றூர்க்கிழா அர்.

---

வெலமதுல நாயுடு 3 வது மகாநாடு:—மேமாதம் 4ந் தேதி மதுரை ஜில்லா குண்ணத்தூரில் நடக்க விருந்த ஷை மகாநாடு சில அசௌகரியங்களை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கப்படுகிறோம்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

வாததாகவும் உண்மைத் தொழில்தத்துவ மற்றதாகவும் நடைபெறுகின்றது.

### குருபக்தி.

அறிவும் தொழிலும் இப்படியானால் உபாத்தியாயர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கிற பொறுப்பும், பற்றுதலும், பக்தியும் இதைவிட மோசமானதென்றே சொல்ல வேண்டும். சாதாரணமாய் ஒரு உபாத்தியாயருக்கும், ஒரு மாணாக்கனுக்கும் உள்ள பற்றுதலையும், பக்தியையும் விட ஒரு தாசிக்கும் அவளுடைய அன்றன்றைய நாயகனுக்கும் உள்ள பக்தியும், பற்றுதலும் மேலானதென்றே சொல்லலாம். எப்படியெனில் ஒரு தாசிக்கு ஒரு இரவு முழுவதாவது ஒரு நாயகன் இருக்கக்கூடும். நமது மாணாக்கர்களுக்கோ மணிக்கு இரண்டு உபாத்தியாயர்கள் வருகிறார்கள். ஒரு நிலையான உபாத்தியாயரிடமிருந்து ஒரு பொறுப்பான விஷயங்களை உணரக்கூடிய சந்தர்ப்பங்களே கிடையாது உபாத்தியாயர்களும் சம்பளம் உயர்ந்த பள்ளிக்கூடங்களுக்குப் போவதும், மாணாக்கர்களும் தங்களுக்குச் சௌகரியப்பட்ட பள்ளிக்கூடத்திற்குப் போவதும் சுயேச்சையாகி விட்டது. பிள்ளை படிக்கவேண்டியதும் உபாத்தியாயர் அவனைத் தேரச் செய்ய வேண்டியதும் அவரவர்கள் இஷ்டத்தைப் பொருத்ததாகவே போய் விட்டதேஅல்லாமல் பொறுப்பும் கவலையும் ஒருவருக்கும் கட்டுப்பட்டதல்லதாகவே இருந்து வருகிறது.

### காலக்ஷேபம்

கல்வி, அறிவு, தொழில் முறை, குருபக்தி ஆகியவற்றின் போக்கியதை இப்படியென்றால் உபாத்தியாயர்களின் காலக்ஷேபமோ நினைப்பதற்கே பரிதாபமாயிருக்கிறது. முன்காலத்திய உபாத்தியாயர்களுக்குகாலக்ஷேபத்தைப்பற்றிய கவலையே இருந்ததில்லை. "உபாத்தியாயர்களுக்கு ஒரு சிறு குடிசையிருந்தால் போதும். பிள்ளைகளுக்கு அக்குடிசைக்கு முன்னால் ஒரு பந்தலோ, கொட்டகையோ இருந்தால் போதும். பிள்ளைகள் படிப்பதற்கு ஐந்தாறு மட்டை பனை ஓலையும் அறை வண்டி மணலும் இருந்தால் போதும். எழுதுகோலாக ஒரு கூர்மையான ஆணி இருந்தால் போதும். மற்றபடி உபாத்தியாயர்களுடைய காலக்ஷேபத்தைப்பற்றி உபாத்தியாயர்களுக்குக் கவலையே இருந்தது கிடையாது. வெள்ளாமை காலத்தில் பையன்களிடம் சொல்லிவிட்டால் கூடைகூடையாய்த்தானியங்கள் வந்து குவிந்து விடும். உபாத்தியாயரே போட்டு வைக்க இடமில்லாததால் போதும் என்று சொல்லிவிடுவார் எண்ணை, விறகு முதலியதுகள் மாதத்துக்கு ஒரு தடவையும், காய்கறி பதார்த்தங்கள் தினமும் தானாகவே பிள்ளைகள் மூலம் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிடும். பண்டிகைகளுக்கு வேஷ்டி துணிகளும், மேற் செலவுக்கு இனும் பணங்களும் தானாகவே வந்து சேர்ந்துவிடும் உபாத்தியாயர் வீட்டில் நடக்கும் கல்யாணம், கார்த்திகை, நன்மை, தீமை, முதலிய சடங்குகளுக்கு அவ்வப்போது பெற்றோர்களும் பையன்களுடைய சுற்றத்தார்களும் தாராளமாகக் கொடுத்து நடத்தி விடுவார்கள் பையனுடைய படிப்புக்கு உபாத்தியாயர் ஜவாப்தாரியாகவும், உபாத்தியாயர்களுடைய காலக்ஷேபத்திற்கு பிள்ளைகளின் பெற்றோர்கள் ஜவாப்தாரிகளாகவும் பரஸ்பரம் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள். ஒரு பையன் வீட்டில் ஏதாவது குற்றஞ் செய்து விட்டாலும் அவன் படித்ததாகச் சொல்லும் பாடங்களில் கேட்ட கேள்விகளுக்குச் சரியான பதில்சொல்லாவிட்டாலும் உபாத்தியாயருக்குக் கொடுப்பதில் குறைத்து விடுவார்கள். உபாத்தியாயர்கள் பெயரைச் சொன்னால் பையன்கள் நடுங்குவார்கள். சாப்பாட்டுக் கவலையென்பதே உபாத்தியாயர்களுக்குத் தெரியவே தெரியாது. உபாத்தியாயர் வீட்டுப் பெண்களோடு குடும்பக் கவலை நின்றுவிடும். எவ்விதத்திலும் அவைகள் உபாத்தியாயர் காதுக்கு எட்டவே எட்டாது, அக்காலத்திய படிப்புச் செலவு இப்போதைய செலவுகளில் பதினாறில் ஒரு பங்குகூட இருக்காது. இப்பொழுதோ பிள்ளைகள் கொடுக்கிற பணம் கணக்கு வழக்கில்லை. புத்தகம் காகிதம் பேனா பென்ஸில், சித்திரசாமான், விளையாட்டுக்கருவி, ரஸாயன சாமான், பெஞ்சு நாற்காலி மேஜை, கட்டடங்கள் இவைகளுக்காகும் செலவுகளே மக்கள் தாங்க முடியாததாகப் போய் விடுகிறது இதன்மேல் உபாத்தியாயர்களுக்குக் கொடுப்பதும் தாங்கமுடியாததாகவே ஏற்பட்டு விடுகிறது.

சாதாரணமாக ஆரம்பாசிரியர்கள் என்போருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் சில ஆபீஸ்களில் பியூன்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் கொடுக்கப்படுவதை விட குறைவாகத்தானிருக்கிறது. குழந்தை குட்டிகளோடு வாழ்கிற ஒரு குடும்பத்திற்கு 30 ரூபாயாவது இருந்தால்தான் கவலையில்லாமல் தன் காரியத்தைக் கவனிக்கக்கூடும் அது கூட இல்லாமல் கஷ்டப்படுகிறதைப் பார்க்கும் பொழுது நமக்கு மிகவும் பரிதாபமாகத்தானிருக்கிறது

### கல்விக்கு ஒதுக்கப் பட்டபணம்.

பசுவைக் கொன்று செருப்புத்தானம் செய்வது போல் நமது அரசாங்கத்தார் கள்ளு சாராயத்தை விற்று அதில் வரும் லாபத்தை யெடுத்து கல்விக்காக செலவு செய்கிறார்கள் ஆகச்சே இன்னும் கொஞ்சம் கல்வி சவுகரியமும், சம்பளச்சவுகரியமும் வேண்டுமானால் இனனும் கொஞ்சம அதிகமாகக் கள்ளுசாராயம் குடித்து, அதனால் அதிக வரும்படியை யுண்டாக்கும் பொறுப்பை நம்ம தலையில் வைத்திருக்கிறார்கள். நமது மக்கள் கற்ற கல்வி பெரிதும் தேசத் துரோகத்திற்கே உபயோகப்பட்டுவரும் காரணமே வெகு குடும்பங்கள் கெட்டதின் பலனாய் ஏற்பட்ட கள்ளு சாராயப்பணத்திலிருந்து படித்ததினால் தான். இம்மாதிரி குடியில்வரும் லாபத்தினால் தான் படிப்புக்குச் செலவு செய்ய வேண்டும் என்று ஏற்படுமானால் மக்கள் படிக்காமல் தற்குறியாக இருந்தாவதுஉபாத்தியாயர்களெல்லாம் தெருவில்கலனுடைத்து ஜீவனம் செய்து கொண்டாவது, கட்குடியை நிறுத்துவதே மேலானதென்பது என் அபிப்பிராயம்.

### படிப்பின் பலன்.

இம்மாதிரி படிப்பு வலுத்ததின் பலனாய் படிப்பின் அவசியமில்லாமல் வேறு வழியில் வாழக் கூடிய பெருத்தகுடும்பங்களெல்லாம் பாழாகிப் போய் கொண்டே வருகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு உயர்தரப்பள்ளிக்கூடங்களென்பது அதிகமாய்க் கொண்டு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் படித்த பெரும்பான்மைப் பிள்ளைகளின் குடும்பங்கள் கெட்டுக்கொண்டே வருகின்றன. உதாரணமாக பூமிகளின் சொந்தக்காரர்களின் பெயர்களைக் காட்டும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் என்னும் பதிவு புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தீர்களானால்அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். 40, 50 வருஷங்களுக்கு முந்திய செட்டில் மெண்ட் ரிஜிஸ்டரிலுள்ள பூமிக்குச் சொந்தக்காரரின் பெயர்களை 10 வருஷத்துக்கு முன்னுள்ள புஸ்தகத்தைப்பார்ப்பீர்களானால் 100-க்கு 75பாகம் மாறிப்போய்த்தானிருக்கும் அக்காலத்தில் கவுண்டர், நாயக்கர், பிள்ளை. படையாச்சி செட்டி நாயுடு, என்றிருப்பது போய் இப்பொழுது, ஐயர், அய்யங்கார், ஆச்சாரியார், செட்டியார், முதலிய உத்தியோகஸ்தர்கள் வக்கீல்கள் வியாபாரிகளாகியவர்கள் பேருக்கே மாறியிருக்கும். காரணமென்னவென்றால், உயர்தரப்பள்ளிக்கூடம் வந்தவுடனே எல்லாப் பிள்ளைகளும் அதில் படிக்கச் சேர்ந்து விடுகின்றனர்கள். குடியானவர்களும் தங்கள் பிள்ளைகளை அதிலேயே சேர்த்து விடுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு படித்துத்தான் ஜீவனம் செய்ய வேண்டுமென்கிற அவசியமில்லாததாலும், "இந்தக் கூட்டங்களும் படித்து விட்டால் உத்தியோகங்கொண்டே வாழவேண்டியவர்களாகிய நம்ம கூட்டத்தார் வாயில் மண் விழுந்து விடுமே" என்கிற பயங் கொண்ட உபாத்தியாயர்களாலும் இப்பிள்ளைகள் சரியாகப் படிக்க முடியாமல், 5, 6 வருஷம் பெஞ்சுக்கு வாடகைகொடுத்ததோடு தலைமயிரைக் கத்தரித்துக்கொண்டும், சிகரெட் பீடி குடித்துக்கொண்டும், வேடிக்கை உடைகள தரித்துக்கொண்டும், பொறுப்பும் ஒழுக்கமுமற்ற சம்பாஷணைகள் பழகிக்கொண்டும், உல்லாசமாய்த்திரிந்து 2, 3தடவை பரீட்சையில் தோல்வியுற்று கடைசியாய் இனி படிப்பு வராது என்கிற முடிவுடன் வீடுபோய்ச் சேறுகின்றதுகள். இந்தப் பட்டணவாசல் பள்ளிப் பழக்கமானது பட்டிக்காட்டு வாசத்துக்குச் சௌகரியமில்லாமல், வீடு வாசல்களும், விவசாயப் பண்ணைகளும் தங்களுக்குப்பிடிததமில்லாததாகி நோக்கமெல்லாம் பட்டிணங்களிலேயே கொண்டுபோய்விடுகிறது. அல்லது சிலருக்குப் பட்டிக்காட்டிலேயே பட்டணங்கள்போல் வீடுவாசல் கட்டி சுகமனுபவிக்க ஆசையேற்பட்டு விடுகிறது. இதன் மூலம் தங்கள் விவசாயம் கெடுவதோடும் தங்களுக்கு க்ஷேமமாய் வரும் பொருள் வருவாயும் கெடுவதோடு அதிக செலவுமஏற்பட்டு அதன் மூலம்கடன்காரர்களாகி வீண் விவகாரங்களில் ஈடுபட்டுகடைசியாய் இக்குடும்பச் சொத்தானது விவ

காரத்தில் அதிகாரிகளுக்கு லஞ்சத்தின் மூலமாகவும், வக்கீல்களுக்குப் பீசின் மூலமாகவும், லேவாதேவிக்காரர்களுக்கு வட்டியின் மூலமாகவும் போய்ச்சேர்ந்து விடுகிறது. இந்தக் காரணங்களால் இவர்கள் பூமிகள் அவர்கள் பேருக்கு பட்டா மாறுவதும் அல்லது அவர்கள் விலைக்கு வாங்குவதுமாய் முடிந்து விடுகிறது. இனியும் ஒரு 50 வருஷத்திற்கு இக்கல்வி முறை இப்படியே இருக்குமானால் நமது பூமிகளெல்லாம் உத்தியோக வக்கீல் கூட்டத்தாருக்கும், லேவாதேவிக் கூட்டத்தாருக்குமே போய்ச் சேர்ந்துவிடும். இப்பொழுதுள்ள மிராஸ்தார்களின் பிள்ளைகளெல்லாம அந்தக் கூட்டத்தார்களிடம் பண்ணையாளாகவும், குடி வாரக்காரர்களாகவும் போய்ச்சேரவேண்டியது தான்.

## அரசியல் புரட்டு.

அரசாங்கத்தாரும். கல்விக்காக கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு பண்ணுகிறார்கள், அவ்வளவும் உபாத்தியாயர்களுக்குப் போவதாயிருந்தால் உபாத்தியாயர்களுக்குக் கஷ்டமேயிருக்காது. பணத்தையெல்லாம் கல்வியின் பேரால் மேற்சொன்னபடி சாமான்களுக்கும், கட்டடங்களுக்கும் மற்றும் பாதிரிமார்களுக்கும் உயர்ந்த சம்பளம் பெறும் உபாத்தியாயர்களுக்கும் இவற்றை மேற்பார்வை பார்ப்பது என்பதாக பல பெரிய பெரிய சம்பளமுள்ள உத்தியோகஸ்தர்களுக்குமே போய் விடுகிறது. இவ்வளவு செலவுகளையும் அனுவசியமாய்ச் செய்துவிட்டு ஆரம்பாசிரியர்களையும் பட்டினிபோட்டுவிட்டு இந்த ஆசிரியர்களை ஆடுமாடுகளை விட கேவலமாகவும் மதிக்கிறார்கள்.

ஜனப்பிரதிநிதிகள் என்கிற சட்டசபை அங்கத்தினர்கள் முதலிய அரசியல் வாழ்வுக்காரர்களோ உங்களிடம் வரும்போது உங்களிடத்தில் ரொம்பவும் அனுதாபம் உள்ளவர்கள் போல் காட்டிக்கொண்டு "உங்களுக்கு சம்பளம் 40 ரூபாய் வேண்டும், 50 ரூபாய் வேண்டும்" என்ற ஆசை வார்த்தை சொல்லி உங்களைத் திருப்தி செய்து உங்களால் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஓட்டுகளைப் பெற்றுக்கொண்டு போய் விடுகிறார்கள். பொது ஜனங்களிடம் போகும் போது அவர்களைப் பார்த்து "சர்க்காரார் உங்களிடம் அதிகவரி வசூல் பண்ணுகிறார்கள் அனுவசியமாய் அதிகமான ஆள் அம்புகள் வைத்து அரசாங்கச் செலவைப் பெருக்கிவிட்டார்கள் நாங்கள் போய் சம்பளத்தையும் செலவையும் குறைத்து உங்களுக்கு வரியைக் குறைக்கிறோம்" என்று மேடை மேல் நின்று பேசிவிடுகிறார்கள். உங்களிருவரையும் ஏமாற்றி சட்டசபையில் போயிருந்து கொண்டு சட்டசபையில் உட்கார்ந்து கொண்டு உங்களுக்கும் அவர்களுக்கும் திருப்தி ஏற்படும் படியாக ஏதோ இரண்டு கேள்வி கேட்டதாகப் பாவனை காட்டிவிட்டு உங்களையும் பொது ஜனங்களையும் வஞ்சிக்கிற காரியங்களுக்காக சர்க்காருக்கு உள உளவாயிருந்து தங்களுக்குப் பெருமையும், உத்தியோகங்களும், பதவியும், கிடைப்பதற்கும் தங்கள் சொந்தக்காரியங்கள் ஏதாவது சாதித்துக் கொள்ளுவதற்கும் ஆளாகி விடுகிறார்கள். வரி குறைப்பதும், சம்பளம் கூட்டுவதும் ஒன்றுக்கொன்று பொருந்தாத விஷயம். வரியையும் குறைத்து உங்கள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமானால் பெரிய உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தையும நான் மேலே சொன்ன வீண் செலவுகளையும் குறைக்கும்படி சொல்லுவதற்கு இவர்களுக்கு தைரியம் வேண்டும். இவர்களோ மாதம் 2000, 3000, 4000, 5000 ரூபாய்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு மந்திரி, தலைவர் முதலிய பதவிகளுக்கு ஆசைப்பட்டுக்கொண்டும், இவர்களே இப்பெற்ற பட்டம் பதவிகளை மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்து, அவர்களை ஆதரித்து அதன் மூலம் தாங்கள் பிழைக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டும் இவர்களுடைய செலவுக்கே தினம் 10, 15, 40, 50 வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், இவர்கள் போக்குவரத்துக்கே முதலாவது இரண்டாவது வகுப்பு இரட்டைப்படிகள் வாங்கிக்கொண்டும், இவர்கள் நடவடிக்கை நடத்தும் கட்டடங்களுக்கே 2 லக்ஷம், 3 லக்ஷம், 2 கோடி, 4 கோடி, அனுமதித்துக் கொண்டு ராஜபோக மனுபவிப்பவர்கள் வேறு யாருடைய, எந்தச் செலவைக் குறைத்து வரி உயர்த்தாமல் உங்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தக் கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். ஆகவே இவ்வித அரசியல் புரட்டுகள் நமது நாட்டிலுள்ள வரையிலும், உங்களைப் போன்றவர்கள் இவைகளை ஆதரித்து இப்புரட்டர்களை மரியாதை செய்கிறவரையிலும் உங்களுக்கு மாத்திரமல்ல இந்த நாட்டுக்கே விமோசனம இல்லையென்பது தான் என் அபிப்பிராயம இனியாவது இந்த அரசியல் புரட்டர்களின் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

## முடிவுரை.

எனவே இவை ஒவ்வொன்றையும், இன்னமும் கிளைக்கிளை மிகவும் மோசமாகவே தான் வந்து கொண்டிருக்கும் இம் மகா நாட்டைப் பொறுத்தவரையிலும் இதிலேற்பட்டிருக்கிற சில தீர்மானங்களைப்பொருத்தவரையிலும் உங்களுக்கிருக்கும் கஷ்டங்களோடும் குறைகளையுமறிந்து நான மிகவும் அனுதாபப்படுகிறேன். உங்களுக்கு இன்னும் சம்பளம் மரியாதைமுதலியன உயரவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் அதற்காக நீங்கள் செய்யும கிளர்ச்சிகளில் கலந்துகொள்ள எனக்கும் ஆசையிருக்கிறது. ஆனால் அந்நோக்கங்களையும், கிளர்ச்சிகளையும் உங்கள் சுயநன்மைக்குமாத்திரமென்றில்லாமல் நமது மக்களின் உண்மையான ஆரம்பாசிரியராய் இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். கல்வி விஷயத்தில் நமது நாட்டுக்கு ஏற்படவேண்டிய திருத்தத்தில், உங்களுடைய உதவியும், தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி முதலியவற்றின் உதவியும் ரொம்பவும் வேண்டியிருக்கிறது. உண்மையான தேசாபிமானக்கண்ணோடு பார்ப்பீர்களானால், உங்களுக்கு இவைகளெல்லாம் விளங்காமற் போகாது. இங்கு விஜயம்செய்திருக்கும் தாலூகா, ஜில்லா, போர்டு அங்கத்தினர்களையும, தலைவர்களையும் இவ்விஷயங்களையெல்லாம் கவனித்து உங்களுக்கு அநுகூலமாயிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். என்னை நீங்கள் ஒரு பொருட்டாய் மதித்துத் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததற்கு என்மனதில் சரியென்று பட்டதை உங்கள் முன் கொஞ்சமும் ஒழிக்காமல் பேசியிருக்கிறேன். இவற்றுள் கொள்ளத் தக்கதும், தள்ளத் தக்கதும் இருக்கலாமென்றே நினைக்கிறேன். ஆதலால் உங்களுடைய அறிவையும் ஆற்றலையும் இவைகளுள் செலுத்தி தள்ளத்தக்கதைத் தள்ளி, கொள்ளத்தக்கதைக் கொண்டு அமுலில் கொண்டுவர வேண்டுகிறேன்.

---

## வாசகர்கள் தெரிவிப்பார்களா?

சின்னாட்களுக்கு முன்னர் பார்ப்பனர்களின் கொடுமைக்காக உயிர் துறந்த உண்மையான சுத்த வீரனான, பொன்னேரி லோகல் பண்ட் ஆஸ்பத்திரி கம்பவுண்டராயிருந்த ஸ்ரீமான் பி. சுப்பிரமணிய முதலியாரின் புகைப் படம் எங்கே கிடைக்குமென்று பலர் எம்மைக் கேட்கின்றனர் அன்னாரின் படம் எங்கு கிடைக்குமென்று எமக்கே தெரியாததால் நேயர்கள் தயவு செய்து பொன்னேரியிலோ, அல்லது காஞ்சியில் அவர் தம் பெற்றோர்களிடமோ கிடைக்கும் என்கிற விபரமறிந்து எழுதினால் மிக்க நன்மையைத்தரும் என தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

**பார்ப்பனீயத்தை ஒழித்தவர்கள்:—** ஸ்ரீமான்கள் வெள்ளமடை ஸ்ரீனிவாசலு நாயுடு, வையம்பாளையம் வெங்கிடசாமி நாயுடு, கெங்கா நாயுடு, நாராயணசாமி நாயுடு, அக்கிபாளையம் வெங்கிடசாமி நாயுடு, கிருஷ்ணம நாயுடு ஆகியகனவான்கள் தங்கள் சிரார்த்தங்களை பார்ப்பனர்களை நீக்கியே செய்து கொண்டார்களென ஒரு நிருபர் அறிவிக்கிறார்

**பார்ப்பனீயத்தை ஒழித்ததிதி:—** கோவை முனிசிபல் அங்கத்தினர் ஸ்ரீமான் V. முத்துசாமி பிள்ளை அவர்கள் நடத்திய தனது முதல் மனைவியின் வருஷாந்திர திதியின் போது பார்ப்பனர்களை நீக்கி சுற்றத்தார்களுக்கு விருந்திட்டு, ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்தார் என ஸ்ரீமான் சு. கந்தசாமி கவுண்டர் அறிவிக்கிறார்.

**கோயமுத்தூர்:—** கோவை முனிஸிபல் ஆரம்ப பெண்பாடசாலை திறப்பு விழாக் கொண்டாட்டம் ஜில்லா போர்டு தலைவரும், முனிசிபல் சேர்மெனுமான ஸ்ரீமான் ராவ் பஹதூர் சி எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் பகீரத குல க்ஷத்திரிய சன்மார்க்கசபையின் ஆதரவில் கூட்டப்பட்டது. பல பிரமுகர்கள் ஆஜராயிருந்தனர். சங்க உதவிக்காரிய தரிசியால் திரு. முதலியாருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை அவர்களால் பெண் கல்வி என்னும் பொருள் பற்றி ஒரு உபந்நியாசம் நடந்தது. பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

# திதி கொடுத்தல்

திரு. தி. சோ. காந்தி மதிநாத பிள்ளை எழுதியது.

---

திதி கொடுத்தல் என்னும் பொருள்பற்றி 17-4-27ல் வெளியான குடியரசில் திருவாளர் க. வா. வேங்கிடாசலம்பிள்ளையவர்கள் எழுதியகட்டுரையைப்படித்து வரும்பொழுது தோன்றியசில குறிப்புகள்.

“தெய்வம், விருந்து, தென்புலத்தார்” இவர்கட்கு வழிபாடாற்றுதல் வேண்டுவது தான் என்றும், அதன் மூலமாய் ஈகைக்குணமில்லாதவன்களுளாரும் அறம் செய்ய நேரிடுகிறதென்றும், திதி வழிபாடுபொருள் தெரியாது செய்து போதல் தவறேயென்றும், படித்த வகுப்பினராற் சிலருக்குத் திதி கொடுத்தலில் நம்பிக்கை இல்லையென்றும், திதி கொடுக்கு முறையில் வாங்குபவர்கள் வசதிக்குத்தக்கவாறு பொருள் சேகரித்துக் கொடுக்கப்படுகின்றனவென்றும், வாங்குபவர்கள் திருப்தியடைவதற்கியலாதவகையில் பச்சை அரிசியையும் பச்சைக்காய் கறிகளையும் உணவாக ஆக்கிக் கொடாமல் பொருள்களை அந்த அந்த நிலைமையிலேயே கொடுக்க நேருவதால் திருப்தியடைய ஏதுக்கள் இலவாமென்றும், மூட நம்பிக்கையால் பலக்குறைவுகளும், திதி செய்யுங்காலங்களில் ஏற்பட்டுவிடுகின்றனவென்றும், இறுதியில் சிறிதும் ஐயப்பாடு இல்லாமல் திதி செய்வது முறைதானோ என்பதைப்பற்றிய வினவை எழுப்பியும் எழுதிய கட்டுரையை வாசிக்கும் மக்கள் கட்டுரையைப் பற்றிய ஆய்வுரைகள் எழுதுதல் கட்டுரையாளர் கருத்துக்கு மாறுபடுதல் இல்லையாதலின் ஈண்டுச்சில குறிப்புரைகள் எழுதலாயினேன்.

சமயவாயிலாகக்கடவுளை நோக்கிச்செய்யப்படும்எல்லா வழிபாடுகளும் எல்லாச் சடங்குகளும், வினையும் வினையின் பயனும் உளவென்பதைப்பற்றிய நம்பிக்கையின்பாலனவாகும். மதம் சமயம் என்றாலே நம்பிக்கையென்று சுருக்கமாகச் சொல்லுவது தவறாகாது. மேல் நாட்டு ஆங்கிலமொழியில் நம்பிக்கை என்று பொருள்படுகிற (faith) என்ற சொல்லே சமயத்தையும் உணர்த்துதல் எவரும் நன்கு அறிந்ததே. வாழ்க்கையில் வருகிற பல துன்பங்களையும் போக்கிக் கொள்வதற்கு மக்கள் செய்யும் சில முயற்சிகள் சமயவாயிலான் நடைபெறுகின்றன. இம்முயற்சிகள் நடைபெறுகின்ற பொழுதெல்லாம் பொருள் தெரிந்து செய்யப்படுகின்றனவாகக் காணப்படவில்லை. அவ்வாறு பொருள் தெரிந்தே எல்லாமுயற்சிகளும் செய்யக்கூடுமென்பதாகவும் தெரியவில்லை. வயிற்றுநோயான் வாடுகின்றான் ஒருவன் மருத்துவன் சொல் வழி நின்றே மருந்துகள் உண்டு நோய் தீர்தல் போல. வேறு வகையில் துன்பம் வருமென்று நினைத்தவிடத்து, அத்துன்பத்தைப் போக்கிக் கொள்வதற்குச் சமய நெறியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சடங்குகளில் நம்பிக்கை கொண்டு (அருத்தம் தெரியாமலே) சில முயற்சிகள் செய்யப்படுவதையும் பார்த்துவருகின்றோம். அவ்வகைப்பட்டமுயற்சிகளுள் திதி கொடுத்தலும் ஒன்றாகச் சிலர் கருதுதல் தவறாகாது. கட்புலனாகாதகடவுளை நோக்கித் தம்பயன்கருதிமக்கள்வழிபாடாற்றுகின்றார்கள். அதுபோலவே இருந்து மறைந்த நமது பெரியோர்களின் நலத்தின் பொருட்டு வழிபாடுகள் பலவகைகளில் செய்யப்பட்டு வருகின்றன வென்பது எவரும் அறிந்தது. இறந்தோர் இன்புறுமாறு ஆடை வாங்கி வைத்து ஆண்டுகள் தோறும் சிறந்த விழா நாட்களில் அவரை நினைந்து வழிபட்டு அவர்கள் மகிழுமாறு அவர் அருந்திய பண்டங்களைச் செய்து படையல் படைத்து வருவதையும் சில நாடுகளிற் பார்க்கலாம். இறந்தவர்கள் கட்புலனாகாத நுண் உடம்போடு நின்று அவர்கள் வழி வந்த பின்னுள்ளமக்களைப் பாதுகாத்து வருகின்றார்கள் என்ற கொள்கையை நம்புகின்றவர்களை இன்னும் காணலாம். இறந்தவர்கள் தாம் பற்றுச் செய்து வந்த மக்களிடத்துத் தம் நுண் உடம்பின் உருவத்தைக் கனவு நிலையிலோ, விழிப்பு நிலையிலோ காட்டிச்சில குறிப்புகளைத் தெரிவிக்கின்றார்கள் என்பதையும் கேட்டு வருகின்றோம். இறந்தவர்கட்கும் இறவாது அவர் வழியில் எஞ்சி நின்ற மற்றவர்கட்கும் இடையிடையே கருத்துப் போக்குவரவு நடக்கின்ற அடையாளங்கள் காணப்படுவனவாகவும் தெரிகின்றோம். இத்தகைய குறிப்புகள் நம்முடைய நாடுகளில் மட்டும் நிகழ்பவைகளல்ல, மற்றைய நாடுகளில் நிகழ்ந்தவைகளையும் கேட்டிருக்கின்றோம். ஆகவே இறந்தவர்கட்கும், அவரால் பற்றுச் செய்யப்பட்டு இறவாது எஞ்சி நின்ற அவர் மக்கட்கும் உறவுரிமை ஒருவகையில் சில காலம் இருக்கக் கூடும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆகவே இறந்தோர்கட்குச் சிறப்புச்செய்தல் இறவாதமக்களின் கடமையாக வருதல் கூடுமென்றே நினைக்க வேண்டியதிருக்கின்றது. இறந்து போகின்றவர் பருத்த உடம்பு நீங்கி நுண்ணியஉடம்பில் செல்லுபவரேயாதலால் அவர்களின் உயிர்க்குணங்கள் உடம்பு போனவழியே போய் விடுமென்று ஒரு தலையாக எண்ணுதற்கில்லை. உயிர்கள் என்றும்உள்ளவைகள்: அவைகள் ஒரு பொழுதும் இல்லாமற் போவனவல்ல. அவைகளின் பொருட்டுச் செய்யும் வழிபாடுகளும் இயற்கைஒழுக்கத்திற்கு புறம்பாகத் தள்ளப் படக்கூடியவைகளென்றும் தோன்றவில்லை. இந்த வழி பாடுகளைச் செய்வது எந்த முறையில் என்று தான் இப்பொழுது ஆராய்தல் வேண்டும். இப்பொழுது பயின்றுவருகின்ற முறை ஊதியங் கருதி வணிகர் செய்கின்ற முறையாக மாறிவிட்டது. எவ்வாறு கடவுள் வழிபாடு தரகர்களை வைத்துக் கொள்ளும்வணிக வழிபாடாக மாறக் காண்கின்றோமோ, அது போலவே திதிவழிபாடும் வணிகர் செய்தியாய் முடிந்துவிட்டது. இந்தத் திதி வழிபாடும் பலவகுப்பார்க்கும் ஒரே வழிபாடாகக் காணப்படவில்லை. சில வகுப்பார் சோறு சமைத்தும், காய்கள் கொண்டகறிகள் சமைத்தும், இறந்தவர்நிலையில்தங்கள் இனத்தவர்களை இருத்தியுண்பித்துவழிபாடாற்றுகின்றார்கள். வேறுசிலர் தம் இனத்தவர் அல்லாதாரை இறந்துபோனபெற்றோர்கள் நிலையில் இருக்கச்செய்து அவர்கள் உண்பதன் பொருட்டு பச்சை அரிசியையும் பச்சைககாய்களையும் பெரியதோர் இலையிற் படைத்து வெற்றிலையில் காணிக்கையாகப் பணமும் வைத்து எள்ளும் நீரும் இறைத்து தம் இனத்தவர் அல்லாதாரை மகிழச் செய்கின்றார்கள். இவ்விரண்டிற்கும் வேறுபாடு ஆராயப்படுகின்ற கட்டுரையிற் கண்டவாறு, சோற்றையுண்பவர் திருப்தியடைதலும் அரிசியையும்காயையும் வாங்குபவர் ஒரு பொழுதும் திருப்தி அடையாது போவதுமேயாகும். திருப்திக்காச் செய்ய வேண்டிய சடங்கு திருப்தியின்றி முடியுமானால் திதிச்சடங்கின் பயன் நிரம்பு மாறில்லையென்பது வெளிப்படை. ஆகவே திதிச்சடங்கு சோற்றின் மூலமாகவே நடைபெற வேண்டுவதல்லது அரிசியின் மூலமாக நடைபெறுத்துதல் தகுதியுடைய தன்றென்றே கருதுதல் வேண்டும். அவ்வாறு சோற்றுத்திதியாக நடத்த வேண்டுகிற போது இறந்தவராக இருத்த வேண்டுவது உடன் உண்ணும் இனத்தவராகவே இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே போதரும்.

உண்பிக்க வேண்டுமென்னும் கருத்தமைந்த திதிச்சடங்கை, இனிமேற் பக்குவப் படுத்தி உண்ண வேண்டிய பொருள்களையாவது, அப்பொருள்களின் விலைப் பணத்தையாவது கொடுத்து மகிழ்வித்தல் எது போலவெனின், ஒருவருக்குச் சிறப்புச் செய்ய நேர்ந்த இடத்து உடம்பெல்லாம் நறு மணங் கமழச்சந்தனச் சாந்துபூசுவதை விடுத்து சந்தனக் கட்டையிற் பிளந்த ஒரு சிறு துண்டுக்கட்டையையும் கட்டையை அறைக்க ஒருசிறு கல்லையும் சேர்த்துக் கட்டி அவர்மார்பிலோ, கையிலோ, கழுத்திலோ, கோத்துத் தொங்க விடுவதை நிகர்க்கும். திதிவாங்குபவர் உடன் உண்ணும் இனத்தவராக இருந்தால் இத்துணைப் பெருந்துன்பங்கள் வராமற் காக்க இயலும். திதிகொடுக்க வேண்டிய இலக்கணங்களைக் கூறியுள்ள நூல்கள் திதிவாங்குவதற்கு (பாத்திரராக) உரியவராக அழைக்கப்பட வேண்டுபவர் திதி கொடுப்பவர் இனத்தவராகவே இருக்கவேண்டுமென்று அறுதி கட்டிக் கூறுகின்றன. இந்த வரம்பு கடந்து வேற்றினத்தவரை அழைத்துத் திதி கொடுப்பதில் வரும் இடையூறுகள் இன்னவென்பதை ஆராய்வாம்.

பிராமணரல்லாத ஒருவர் தம்முடைய தந்தையாரின் திதியை நடத்த எண்ணுகிற காலத்தில் அவருடைய இனத்தவரல்லாத பிராமணர் ஒருவரைத் தம் தந்தையாருக்குப் பதிலாக இருக்கச் செய்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். அந்தப்பிராமணர், பிராமணரல்லாதாரின் தந்தையாராக இருக்க சம்மதித்து வருகிறார். அவரே தம்மை இறந்தவர் தானத்தில் இருக்க ஒப்புக் கொண்டு திதி கொடுப்பவர்கையில் தம் தலையில் ஒரு தருப்பைப்புல்லைப் போடச் செய்து தாம அந்தத்தானத்தை மேற்றுக் கொண்டு பிராமணரல்லாதார் ஆகிவிடுகின்றார். திதிச் சடங்கு காலை 9-மணிக்குத் தொடங்கப்படுகிறது. சடங்கு முடிவுபெற 12 மணியாகும். ஈண்டுக்குறித்த இடை

பிட்ட நேரமாகிய மூன்று மணி நேரமும் திதி வாங்க வந்த பிராமணர் பிராமணரல்லாதாரின் சொரூப நிலையை அடைந்திருக்கிறார் என்பதில் ஐயப்பாடொன்றும் இல்லை இனி திதிச் சடங்கு தொடங்கிய பின்னும் திதிச் சடங்கு முடிவதன் முன்னும் இடையில் திதி வாங்கி வந்த பிராமணருக்கு திடீரென்று மூச்சடங்கி உடலை விட்டு உயிர் பிரிய நேர்ந்தால் அந்தப் பிராமணர் பிராமணரல்லாதாரின் தந்தையாராகவே இறக்கின்றார். இறந்து பட நேர்ந்த இவர்க்கு எவர் கருமம் செய்ய வேண்டுமென்பது பெரிய வினாவிற்கு இடமாகின்றது. திதி வாங்க வந்தவர் பிராமண குலத்தவர். வயிற்றுப் பிழைப்பிற்காக பிராமணரல்லாதவர் ஆகத் தம்மை ஏற்றுக்கொண்ட பொழுது இவர் பிராமணராக இறக்கவில்லை. பிராமணரல்லாதார் ஆகவே இறந்து பட்டார். இதில் ஐயப்பாடு தோன்றுவதற்கு ஏதாவது இடமிருக்கிறதோ? இல்லவே! இல்லை. இந்த நிலையில் இறந்து பட்டவர்க்குக் கருமம் செய்ய வேண்டியவர் எவர் என்று ஆராய்ந்து பார்த்தால் திதி கொடுக்க ஆரம்பித்த பிராமணரல்லாதார் என்றே தீர்மானிக்க வேண்டி வருகிறது. அப்படியானால் திதி வாங்கவந்த பிராமணர் வீட்டில் உள்ள இவர் மனைவியார் தம் கழுத்திலுள்ள மங்கலநாணை இழக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்ற முடிவு கட்டிவிடவேண்டியது தானே? இனி இக்கதையை விரித்துக்கொண்டுபோனால் பல இடையூறுகள் நேரும். ஆகவே தம் இனத்தவர் அல்லாதாரை அழைத்துத் திதி கொடுக்க நேருவதால் பல துன்பங்கள் உளவாமென்று எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். தம் இனத்தவராக இருந்து திதிச்சடங்கில் உணவு அருந்தும் பொழுது இடையூறு நேர்ந்தால் ஒரு இனத்தவருக்குள் ஒருவருக்கொருவர் கருமஞ் செய்து கொள்வதற்குரிய சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பொழுது துன்பம் ஒன்றும் வாராத வகையில் காவல் செய்து கொள்ளலாம். தம இனத்தவருக்கே திதி கொடுத்தவரும் பிராமண மக்கட்கு இவ்வாறு இடையூறு நேருவதற்குக்காரணம் ஒன்றுமில்லை திதி சட்டம் எல்லாமக்கட்கும் ஒரே படித்தாகத் தானே இருக்கவேண்டும் அப்படியானால் பிராமணரைப்போலவே பிராமணரல்லாதாரும் திதி கொடுக்க நேரும் இடத்துத் தம் இனத்தவரை அழைத்துத் திதி கொடுப்பதே மிகுந்த சிறப்புடையதென்றுதேர்ந்து தெரிந்துகொள்ளுதல்வேண்டும். இது நிற்க,

இனித்திதிச் சடங்கு மற்றொருவகையில் அர்த்தமில்லாமல் செய்யப்படுகிறதென்ற பெருங்குறைவு தீரவேண்டுமானால், சடங்கு நடக்கும்பொழுதெல்லாம் உபயோகிக்கப்படும் சொற்கள், சடங்கு செய்து கொள்ளுபவர் பேசிவருகிற பேச்சு மொழியிலேயே இருக்கத்தான் தீரவேண்டும். சடங்கில் பயின்று வருகின்றசொற்களோ, சொற்றொடர்களோ சொற்றொடர்களால் ஆக்கப்பட்ட சங்கற்பங்களோ முழுவதும் பேச்சு மொழியிலேதான் இருக்கவேண்டுமென்று உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். சடங்கு செய்து வைப்பதற்காக வரும் வேள்வி ஆசிரியர் (புரோகிதர்) எந்த மக்கட்குச் செய்து வைக்கப் போகின்றாரோ அந்த மக்கள் பேச்சு மொழியிலேயே சொற்களைச் சொல்லிச் செய்து வைக்கவேண்டுமே யல்லாது அவருக்குத் தெரியாத மற்றொரு மொழியின் சொற்களைச் சொல்லிச் செய்து வைப்பது பெருத்த தீங்குகட்கிடமாகின்றது. ஆகவே, பல வகைகளில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. அவைகளை நீக்கிக் கொள்ளுவதற்குச் சிந்திக்கவேண்டிய கருத்துக்களாவன:—

இறந்தவர்கட்கு வழிபாடாற்றுதல் ஒழுங்குமுறை தானென்று தெரிந்து கொள்ளுதல வேண்டும்.

வழிபாடாற்றும் பொழுது ஏற்றுக் கொள்ள வருபவர் கொடுப்பவர் இனத்தவராகவே இருத்தல் வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

திதிச் சடங்குகளில் பயிலப்படும் சொற்களும், சொற்றொடர்களும், பேச்சு மொழியிலேயே அமைத்துக் கொள்ளுதலும் வேண்டும்.

### திதியின் தத்துவம்.

இறந்தவர்களின் நலங்கருதி அவரிடத்துப் பற்றுச் செய்து இறவாது எஞ்சி நின்ற மக்கள் செய்யவேண்டிய கடன்.

மக்கள் செய்யும் வினையின் பயன் இறந்து பட்ட பெற்றோர்கட்கு எங்ஙனம் செல்லுமென்பது தான் ஆராய்ச்சிக்குரிய பொருள். சமய நம்பிக்கை உடைய மக்கள் தம் கண்ணுக்குப் புலப்படாத கடவுளை நோக்கிச் செய்யும் வழிபாடுகளால் தமக்கு உய்தி உண்டென்று கருதுவது போல, இறந்த உயிர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்களுக்காக அவர் மக்கள் தம்மால் செய்யப்படும் வினைகளின் பயனை தென்புலத்தார் என்றும், கடவுள் நீதியார் இறந்தவர்கட்குக் கூட்டி வைக்கின்றார் என்றும், ஒரு சமய நம்பிக்கை பற்றியே திதிகள் செய்யப்பட்டு வருவதாகப் பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கின்றேன். மக்கள் செய்யும் வினையின் பயன் இறந்து பட்ட பெற்றோர்கட்குச் சாரும் என்ற நம்பிக்கைபோலவே பெற்றோர்கள் தம் மக்கள் பொருட்டுத் தாமே செய்யும் பிறப்புச் சடங்குகள் (ஜாதகன்மம்) தம்மக்கட்கு நலம் தருமென்றே செய்யப்பட்டுவருகின்றன. இது எது போலவெனின் வயலை உழுபவர் செய்யும் உழவுத் தொழிலின் பயன் உழுபவரைப் பற்றி நில்லாது வயலைப்பற்றி நின்றே பயன் தருதல் போல என்று சொல்லக்கூடும். இன்னும் பாம்பின் விடத்தால் நலிவு கண்ட ஒரு மகனுக்கு விடம் தீர்க்க வருபவன் தன் மனோ முயற்சியால் சில மறை மொழி (மந்திரம்) களை எண்ணி எண்ணி உருவேற்றுங்கால் விடம் தீர்ப்பவன் மாட்டு நிகழும் மனோமுயற்சி விடம் தீண்டப்பட்டவனாகிய மற்றொருவனுக்கு விடம தீர்த்தலாகிய பயனைச் செய்வது கண் கூடாகக் காண்கின்றோமல்லவா? அது போல மக்கள் இறந்து பட்ட தம் பெற்றோர் பொருட்டுச் செய்யும வழிபாட்டால் வழிபாட்டுத் தொழில் செய்பவரிடத்தைப் பற்றியதே எனினும, எவரை நோக்கிச் செய்யப் படுகின்றதோ அவருக்கும் பயன் விளையும் என்ற நம்பிக்கையைப் பற்றியே சடங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. இறந்துபட்டவர்கள் நம்முடைய கண்ணுக்குப் புலப்பட வில்லையேயென்பதுபற்றி அவர்கள் இருப்பின் உண்மையை மறுக்கலாகாது இறந்த உயிர்கள் நாம் காணும் நிலையில் இல்லாது போயினும் வேறு எந்த நிலையிலாவது இருந்து தான் தீர்தல் வேண்டும். ஏனென்றால், உயிர்கட்கு என்றும் அழிவில்லையாகலான், ஆகவே, இறந்து பட்ட உயிர்களின் சார்பாக வழிபாடாற்றுதல் முறையென்றே கொள்வதிற் பிழை யொன்றும் இல்லையென்றே கருதுகிறேன். இது நிற்க,

ஒவ்வொரு மக்களும் திதியின் தத்துவத்தை உணர்ந்த பின்னரே தான் திதி செய்ய வேண்டுமென்பது எல்லார் மாட்டும் இயலாததாகும். மக்கள் வாழ்க்கையே ஒருவர் செய்த வழக்கத்தைக் கண்டு பின் பற்றுதலேயல்லாமல் வேறில்லை. உலகியல் பெரும்பாலும் அவ்வாறு நடந்து வருகின்றது. ஒரு கருமத்தைச் செய்யவேண்டுமென்னுங் கருத்து வகையில் குற்றமில்லாமலிருந்தால் சடங்கைச் செய்து வைப்பவருடைய குற்றம் குறைவுகள் செய்பவரைச் சாரவேண்டுமென்னும் சடங்கு செய்து கொள்பவர்களும் சடங்கின் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொண்டு அதற்கிசையச் செய்து வைப்பவர்களைத் தேடிக்கொள்ளல்வேண்டுமே யன்றி வேறு வகையில் செய்து வைப்பவர்களின் குறைபாடுகளையும் ஏமாற்றங்களையும் கூறவரும்பொழுது ஏமாற்றப்படும் தகுதியுடையவர்கள் என்றே சடங்கு செய்து கொள்பவர் தங்கள் வலுக்குறைவை வெளிப்படுத்த நேரிடும். இந்த நிலையில் சடங்கு செய்து கொள்ள விருப்பமுடையவர்கள் தங்கள் தங்கள் இனத்திலுள்ள பெரியோர்களைக்கொண்டு ஒவ்வொரு சடங்கும் செய்து கொள்ளவேண்டுவது தான் கால இயற்கைக்குப்பொருத்தமாவதோடு இயற்கையுண்மையும் அதுவேயென்று தெரிந்து கொள்ளல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் தத்தம் குலத்திலுள்ளவரே தமக்குக் குலகுருவாக இருந்து எல்லாச் சடங்குகளையும் செய்துவைக்க வழி தேடிக்கொள்ளவேண்டும். ஒரு குலத்துப் பெரியோர் மற்றொரு குலத்திற்குக் குருவாக வரிக்கப்படுதல் வேண்டுமானால் இரண்டு குலத்தவரும் ஏற்றத் தாழ்வின்றி உண்ணல், கலத்தல் முதலிய எல்லாச் செய்கைகளிலும் ஒத்தவராக இருந்தால் அல்லாமல் சடங்குகள் செம்மையாக நடைபெறுவன வல்லவாம். முன்னர் கூறியபடியே சடங்கின் ஏற்பாடுகளும், சடங்கு செய்பவர் பேசிவரும் எளிய பேச்சுமொழியிலேயே இருந்துவரவேண்டும் என்பதும் இன்றியமையாத கட்டுப்பாடாம். நிற்க,

திதியைப்பற்றிய சில கருத்துக்களை எனக்குத் தோன்றிய வாறு எழுதி வெளியிடலாயினேன். இப்பொழுது இருக்கின்ற கால நிலையின் எழுச்சியில் வருகின்ற கருத்துக்களைப் பெரியோர்கள் தாம் ஆராய்ந்து வைப்பதோடு பிறர்க்குப் பயன் படுமாறும் வெளியிடுதல் எல்லா நலத்தினும் மிக்கதோர் நலமாகத் தோன்றுகின்றது.

## திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது

விலை நயமானது — சரக்குமேலானது

Trade Mark



28 இஞ்சு டஜன் 1க்கு 7—14—9
30 ,, 8—4—0
32 இஞ்சு டஜன் 1க்கு 8—10—0
34 ,, 9—0—0

Registered.

உங்களுக்கு வேண்டியசுத்தக்கதர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதா வென்று கவனித்து வாங்கவும். ஒரே தடவையில் ஒரு டஜன் பனியன்களும் அதற்கு மேல்கொண்டு வாங்குபவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்:—

*M. V. K. Khaddar Banian Works, Tirupur (S. India)*



நல்ல சமயம்! நல்ல சமயம்!!

தற்கால நாகரீகத்திற்கேற்ற வியாபார நடை, தொழில் நடைகளுக்கு அத்தியாவசியமான ஆங்கிலம் கற்கவேண்டுமா?

தபால் மூலம்

ஐந்தே மாதம் ஐந்தே ரூபாய்

கடந்த 7 வருஷகாலமாய் நேரில் ரூ 25க்கு கற்றுக் கொடுக்கப்பட்ட 5 மாத இங்கிலீஷ் கோர்ஸை இப்போது தபால்மூலம் தமிழ் தெரிந்த எவரும் ரூ 5 க்குக் கற்றுக்கொள்ளலாம். அநேக வியாபாரிகளும், கல்வி இலாகாத் தலைவர்களும் நற்சகட்சி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். பிராஸ்பக்டெஸுக்கு உடனே எழுதுங்கள்.

பிரின்சிபல்

காம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட், நாகூர்.


## பிரபவ ஆண்டு

### சுயமரியாதைக் காலெண்டர்.

ஏற்கனவே நாம் கமிட்டியின் சார்பாய் விளம்பரம் செய்திருந்தபடி காலண்டர்கள் மிக்க அழகாக மூன்று கலர்களில், சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றி நமக்குக்கிடைத்து விட்டன. 31—3—27 க்குள் நமக்கு கிடைத்த ஆர்டர்களுக்கெல்லாம் வி. பி. யில் அனுப்பி விட்டோம். இன்னும் சில நூற்றுக்கணக்கான காலண்டர்களே கைவசம் இருக்கின்றன. வேண்டுவோர் உடனே ஆர்டர் செய்ய வேண்டும். வருகிற ஆர்டர்களுக்கு உடனே வி. பி. யில் அனுப்பி விடுவோம். காலண்டர்கள் ஆர்டர் செய்பவர்களுக்குக்கிடைக்காவிடில் "செலவாய் விட்டது" என்று தெரிந்துகொள்ளவேண்டும் பதிலறிய விரும்புவோர். தபாற் பில்லை அனுப்பவேண்டும் சென்னை சோல்டன் கம்பெனியார் மிக்க அவசரமாக அச்சியற்றிக் கொடுத்தமைக்காக நன்றி செலுத்துகிறோம் காலண்டர்கள் தமிழ் மாதங்கள் பனிரெண்டுக்கும் பனிரெண்டு தாள்களுடனும் மேல் அட்டையுடனும் திரு. வைக்கம் வீரமூர்த்திகளின் 5 அங்குல உயர திருவுருவத்துடனும், பிரிட்டானிய, பிராமணீய ஆதிக்கங்களை ஒடுக்கும் அருமையான 12 சொற்களுடனும், 52 சுயமரியாதை வாக்கியங்களுடனும், பெரிய சைசில் மிக்க அழகாக அமைந்திருக்கின்றன. நமக்கு அணு 0—3—0 அடக்குகிறது பிரசாரத்தின் நோக்கமாக அணு 0—2—0 க்கே அனுப்பி வருகிறோம். உடனே எழுத வேண்டும் பின்னால் ஏமாற்றமடையாதிருக்க எச்சரிகை செய்கின்றோம்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணி வாசகத்தமிழகம்" திருச்சி.


## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி



## சர்பத் சத்து.

### கோடை காலத்திற்கோர் குளிர்ந்த பானம்.

ஒரு டம்ளர் சுத்த ஜலத்தில் 5 சொட்டு சர்பத்து சத்து சேர்த்தால் போதுமானது. குளிர்ந்த மணமும் மதுரமான ருசியையும் கொடுத்து தாகத்தை தணிக்கச் செய்யும். பழங்களின் சத்துக்களும், தித்திப்பும் இதில் அடங்கியிருக்கின்றன. மற்ற பானங்களைவிட குறைந்த விலையுள்ளது. 50 வேளை உபயோகிக்கக் கூடிய புட்டி 1-க்கு விலை ரூ. 1.

எசென்ஸ் காப்பி:— ஒரு டம்ளர் வெந்நீர் அல்லது பாலில் ஒரு கரண்டி எசென்ஸ் சேர்த்தால் நல்ல காப்பியாகி விடுகிறது. டிக்காக்ஷன் தயார் செய்ய வேண்டிய சிரமமில்லை. நினைத்த பொழுது காப்பி தயார் செய்து கொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை அணு 12.

ராமய்யா எலக்டரோ கெமிக்கல் ஒர்க்ஸ்
வீரவநல்லூர் (S. I. R.)


## அறிவிப்பு.

ஆபீஸ் சம்பந்தப்பட்ட கடிதப்போக்கு வரத்துகள் காரியஸ்தர் குடி அரசு ஆபீஸ் என்று எழுதி அனுப்ப வேண்டும்.

மணியார்டர் மூலமாகவோ அல்லது இன்ஷியூர் மூலமாகவோ அனுப்பப்படும் பணமோ அல்லது செக்கோ, மானேஜர், "குடி அரசு" ஈரோடு என்று அனுப்பப்பட வேண்டும்

பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர் தயவு செய்து கடுதாசியின் ஒரே பக்கத்தில் இங்கியில் எழுதி ஆசிரியர், "குடி அரசு" ஈரோடு என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

பத்திராதிபர்,
"குடி அரசு" ஈரோடு.


## தாய்மார்கள்

### கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—சாத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இருந்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.


2-ம் பக்கத்தொடர்சி

தாண்டினால் மோசமில்லை. நிதானித்துச் செய்வோமென்பதும் அவ்வளவு பொருத்தமுடையதல்ல. வாந்தி பேதி கண்டு மயங்கிக் கிடப்பவனுக்கு மருந்து கொடுக்கப் பஞ்சாங்கத்தைப் பார்த்தல் போலவே முடியும். வாந்திபேதியினும் வலியநோய் இது. பயத்தை யொழித்து முயற்சியிற்றளைத்து முன்னேறவதே மன்னுயிர்க்கு நல்லவோர் வழிகாட்டி. வல்லவோர் சேனைவீரர், கல்வியும் வலிய நெஞ்சரத் தலைவர் திருமிகு நாயக்கர் [நீடுவாழ்க] செந்நெறிச் செல்வதே சிறந்த ஆக்கம். பாவம், புண்ணியம், மோட்சம் எல்லாம் எக்கந் தெளிந்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம். சுவற்றைக் கெட்டிப் படுத்தியன்றோ சித்திரம் எழுதவேண்டும். இது வரையில்முன்னோர் அடைந்த ஆக்கமும், மோட்சமும் போதும். அவற்றின் மிச்ச சொச்சங்களைக்கைப் பற்றிக் கொள்ளலாம். பாழான மணங்குவிந்து மீளாத அடிமைத்தன்மையை விலக்கி மேலாக வாழ விரும்பின் தாழாது எழுமின், சதுர் படைச் சென்மின், ஆள்வினையுடையராய் அடர்ந்து நின்று வெற்றி பெறுமின். குருட்டை மருத்துவன் நீக்கின பின்னரும் கோலைத் தூரத்தே எறிந்து விடாமல் குருட்டிலும் என் செய்வது என்று கையில் வைத்திருக்கலாமா! நல்ல கண்ணுக்கு இருட்டில் வெளிச்சமுண்டு. "குருட்டாட்டமாடித் திருட்டுக்கொடுத்த" பழமொழி நீங்கிப் பயன் பெற முந்துங்கள். அன்பர்களே! நயம்பட வாழ்வதே நமது கடமை மடமை நீங்கும் காலமடுத்ததே மாண்பு. "காலமுண்டாகவே காதல் செய்துய்மின்" கருதரிய அநுகூலம் கைகூடும்.

## குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மானித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

## நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரிலும, சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள், மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பபபடும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.
மதராஸ்.

## சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள்; ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரிபார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தாத் தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

---

நமக்கேற்ற நவீனக நாவல் — நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவரவரதிர்ஷ்டம் அறியலாமிதுநிஜம், — ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

## இரங்கூன் இரகசியம். ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மனமிராது. நாகரீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிர்த மமைந்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம் கம்பளி வேஷம் போடும் வயிற்றுப்பிழைப்பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்நிய தேச ஜீவனும்ச கஷ்ட நஷ்டத்தின் பலனை போதிப்பது. தம்பதிகளின் சமுசார வாழ்க்கைத்துணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது. மனதின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள் வழிபறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச்செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோலெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தரமான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு. புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0 வி. பி. தபால்செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,
தபால் பெட்டி P. நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்

## அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதிதர்ம பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1-வது பிரைஸ் ரூ. 3000, 2-வது பிரைஸ் ரூ. 1500, 3-வது பிரைஸ் ரூ. 1000 4வது பிரைஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ. ரூ 200.

100 ரூபாயில் 5 பிரைஸுக்கு ரூ. 500, ரூ. 50ல் 20-க்கு ரூ. 1000, ரூ. 20ல் 50க்கு ரூ. 1000, ரூ. 10ல் 100க்கு ரூ. 1000, ரூ. 5ல 200க்கு ரூ. 1000, ரூ. 3ல் 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ் 3381க்கு ரூ. 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000, குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ. 1800. தனிப்பிரைஸ் ரூ. 1700, பண்டுக்குரூ. 9000 ஆக ரூ. 33000.

1. (4—5—1927) பிரபவ-௵ சித்திரை-௴ 22-உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2. 33000 சீட்டுகளுக்குமேல் விற்பனையாகுமானால் ஈவுப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் ஈவுப்படி குறைக்கப்பெறும்.

3. 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் சீட்டை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ சூ. ஆ முத்துசாமி நாடார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சூ ஆ முத்து நாடார், பத்திராதிபர்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மலாப்பூர்-மதருஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.